Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

# வான் கலந்த வாசகங்கள்

சீ
126

பன்மொழிப் புலவர்
மு. கு. ஜகந்நாத ராஜா

மணிமேகலை மன்றம்
இராஜபாளையம்.

igitization by American Academy of Indic Studies. AAIS(USA

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

# வான் கலந்த வாசகங்கள்

※

பன்மொழிப் புலவர்
மு. கு. ஜகந்நாதராஜா

※

வெளியீடு:
மணிமேகலை மன்றம்,
இராஜபாளையம்.
1980

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

VAN KALANTHA VACHAKAMGAL
(Radio Talks)

First Edition 1000 c. May, 1980

Author:

Mu. Gu. JAGANNATHA RAJA

Publishers:

Manimekhalai Manram
Rajapalayam

Distributors:

Viswasanthi Pathippagam
Rajapalayam.

Printers:

Nandhini Atchagam,
Rajapalayam

Price: Rs. 4.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 5 |
| ௨. | மகாவீரர் நெறி | 11 |
| 3. | கன்பூஷியஸ் நெறி | 31 |
| 4. | டால்ஸ்டாய் நெறி | 55 |

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

## சமர்ப்பணம்

உலக இன்பங்களைத் துச்சமாக
மதித்து, ஞான தாகத்துடன் சத்திய
தரிசனத்தைத் தேடி, புத்துலகைச்
சிருஷ்டித்த மேதைகள்
மகாத்மா காந்தியடிகள்,
விளாடிமிர் இலியிச் லெனின்
ஆகிய இருவருக்கும்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


# முன்னுரை

திருச்சி வானொலி நிலையத்தில், நெறிவிளக்கப் பகுதியில் நான் ஆற்றிய தொடர் உரைகளின் தொகுப்பே இந்நூல் ஆகும். **மகாவீரர் நெறி** 10—4—78 முதல் 15—4—78வரையும், **கன்பூஷியஸ் நெறி** 4—9 78 முதல் 9—9—78 வரையும், **டால்ஸ்டாய் நெறி** 5—3—79 முதல் 10—3—79 வரையும் ஒலிபரப்பாயிற்று. வான்கலந்த இவ்வாசகங்களின் வரி வடிவமே இந்நூல்.

**மகாவீரர்** இந்திய நாட்டில் மகதநாட்டில் கி.மு ஆறும் நூற்றுண்டில் பிறந்தவர். அவரது தொன்மை மிக்க தரிசனம் இந்நாட்டின் பண்பாட்டின் அடிப்படையாக அமைந்தது. அகிம்சையும்,அநேகாந்தவாதமும் அவர் நமக்குத் தந்த அருங்கொடைகள். அன்பின் மூலமே உலகம் உய்யுமென்றும், பிறர் கருத்தை மதித்து நடக்கும் பொறுமைக்குணமும், பொருள் சேர்ப்பதில் அளவோடிருத்தல் வேண்டும் என்பதும் அவரது உயரிய உபதேசங்களாகும். அவரது அருட்சுடர் இன்றும் நமக்கு ஒளி வீசிக்கொண்டிருக்கிறது.

**கன்பூஷியஸ்** சின நாட்டில் கி. மு. ஆறும் நூற்றுண்டில் வாழ்ந்த உயர்ந்த சிந்தனையாளர். மரணத்திற்குப் பின்னுள்ள மனித ஆன்மாவின் நிலையைப் பற்றியோ, இறைமைத் தத்துவம், சிருஷ்டி ரகசியம்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


முதலிய புலன் கடந்த கற்பனை ஆய்வுகளோ செய்யாமல் புத்தரைப்போல இவ்வுலக வாழ்வில் மனிதன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை ஆய்ந்து கூறிய மேதை. அன்பு, அடக்கம், எளிமை, தொண்டு முதலிய அருங்குணங்களை தெளிவாக உபதேசித்தார்.

**டால்ஸ்டாய்** ருஷிய நாட்டில் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவரது 150 வது பிறந்த நாள் விழா உலகெங்கும் அண்மையில் கொண்டாடப்பட்டது. மகாத்மா காந்தியடிகளால் தமது குரு என்று போற்றப் பட்டமகான். உயர்ந்த சிந்தனையாளர். எழுத்தாளர். விஞ்ஞானத்தால் யந்திர நாகரிகம்உருவாகி ஆடம்பரமோகத்தில் சிக்கித் தவிக்கும் உலகிற்கு ஆன்மீக ஒளி காட்ட வந்த அற்புதமேதை. பிறருழைப்பைச்சுரண்டும்கொடுமை நீங்கி தனது தேவைகட்கு தானே உழைத்து எளியவாழ்வு வாழ வேண்டும் என்றும் அப்போதுதான் உலகம் அமைதியுடன் வாழ முடியும் என்று கூறினார். கிறிஸ்தவ மதத்தின் போலிச் சடங்குகளை வெறுத்தாலும் உண்மைக் கிறிஸ்தவராக வாழ்ந்த உத்தமர்.

இம் மூன்று தத்துவ ஞானிகளும் காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்டவர்களானாலும், மதக்கருத்துக் களில் முரண்பாடுடையவர்களே ஆனாலும், மனிதன் வாழும் வழிகாட்டும் வகையில் ஒரே செய்தியைத்தான் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். உண்மை ஒன்றாகத்தானே இருக்க முடியும்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


இம் மூவரும் ஒரே குரலில் சொல்வது இதுதான். அன்புபிறர் கருத்துகட்கு மதிப்பளித்தல்,எளியவாழ்க்கை, உழைப்பு, ஆகியவைதான் மனித குலத்தை உய்விக்கும் நெறியாகும். இதுவே அறம். அறத்தில்உறுதியான நாட்டத்துடன் சமுதாயத் தீமைகளை, ஆடம்பர மோகங்களை பிறர் உழைப்பைச் சுரண்டல், பிறருடைமைகளைக் கவர்தல் முதலிய தீமைகளை எதிர்த்து சமத்துவ, சகோதரத்துவ முடன் வாழ்ந்து வர வேண்டும். அப்போது தனி மனித சுதந்திரம் தானாகவே மலரும்.

இம் முப்பெரும் ஞானிகளும் இக வாழ்வின் மேன்மையை, மானுடத்தின் மதிப்பைப் பாராட்டியவர்கள் ஆகும். மனித மனத்தைச் செம்மைப்படுத்துவதன்மூலம் சமுதாயம் செம்மை பெறும் என்று நம்பியவர்கள். இவர்களில் கன்பூஷியஸ் சிறிது கண்டிப்பாகவே அறநெறியை அமல்படுத்துவதில் முனைந்தவர். மகாவீரர் இகவாழ்வோடு பாரமார்த்திகமான துறவு வாழ்வையும் இணைத்து தனிமனித விடுதலைக்குப் பாடுபட்டார். கன்பூஷியஸ் இவ்வுலகத்தைப்பற்றியே அதிக நாட்டம் செலுத்தியவர். மகாவீரர் உலகம் ஆத்மா எனும் இரு தத்துவங்களையும் இரு சக்கரங்களாகக் கொண்டு தம் அருள் தேரை நடத்தியவர். டால்ஸ்டாய், உலகம், ஆத்மா, இறைவன் எனும் முப்பொருளிலும் நம்பிக்கை கொண்டவர். இவ்விதமாக அடிப்படைத்தத்துவத்தில் மூவரும் மூன்று நிலைகளைக் கொண்டாலும் இவ்வுலகத்தை விளக்குவதிலும், மனித வாழ்வின் சாரத்தை மதிப்பிடுவதிலும், வாழும் நெறியைக் காட்டுவதிலும் ஒரேபாங்காக ஒரே முடிவினையே

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


வற்புறுத்திக் கூறுகின்றனர். மூவருமே அன்பு நெறியினர். எளிய வாழ்வினர். தொண்டுள்ளத்தர். தாம் வாழ்ந்து வழிகாட்டியவர்கள். இம் மூவருமே செல்வச் செழிப்பு மிக்க பிரபு வம்சத்தவர்கள்தான். எனினும் பொருளைத் துச்சமென மதித்து அருளை நாடிச் சென்ற அறவோர்கள்.

இம் மாபெரும் சிந்தனையாளர்கள் வழங்கிய அறநெறிகள் இன்சொல் அமுதமாகி நம்நெஞ்சில்பதிந்து நம்மைப் பற்றி ஒரு கணம் சிந்திக்கத் தூண்டுகின்றன. உண்ட உணவு நம்மையறியாமலேஜீரணமாகி ரத்தமாகி நம் உடல் நலனுக்கு உதவுவது போலவே இச்சிந்தனைகளும் நம்மையறியாமலே உட்புதைந்து சிந்தனைக்களத்தில் ஆற்றல் புரிந்து உள நலனுக்கு உதவும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. "எனைத்தானும் நல்லவை கேட்க" என்று வள்ளுவர் கூறியது போல சிறந்த சிந்தனைகள் பயிலப்பயில மனவிசாலம் அடைவதும், உள்ளம் உயர்வதும் நம்மைச் சிறிதளவேனும் மேனிலைக்குக்கொண்டு செல்வதும் இயல்பு. ஆதலின், மகாவீரர், கன்பூஷியஸ் டால்ஸ்டாய் ஆகிய இப்பெருஞ் சிந்தனையாளர்களின் சிந்தனைகளையும் ஊன்றிப் படித்துணர்ந்தால் உறுதியாக நலன் தரும்

இந்த வானொலி நெறி விளக்க உரைகளை நூலாக்க அனுமதியளித்த திருச்சி அகில இந்திய வானொலி நிலைய இயக்குநர்அவர்கட்கும், தமிழ்ப் பேசசுத் துறை நிகழ்ச்சிப் பொறுப்பாளர்களும் கெழுதகை

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

அன்பர்களுமாகிய திரு. **ப. யு. அய்யூப் M. A.** அவர்கட்கும் திரு. **V. திருவேங்கடம் M. A.** அவர்கட்கும் என் உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன். இந்நூலை வெளியிடுவதில் ஆர்வம் காட்டி, பொருளுதவியும் புரிந்த வள்ளற் பெருந்தகையாளரும் செந்நெறிச்செம்மலுமாகிய தொழிலதிபர் திரு. **P. K. ராமசாமி ராஜா** அவர்கட்கு என் நன்றியும் வணக்கமும் உரித்தாக்குகிறேன். மணிமேகலை மன்ற வெளியீடாக இந்நூல் மணிமேகலை மன்ற இருபத்திரண்டாவது ஆண்டு விழாவின்போது வெளியிடப்படுவதில் மகிழ்ச்சியுறுகின்றேன்.

இராஜபாளையம்,
28 – 5 – 80

**மு. கு. ஜகந்நாத ராஜா**

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

# ஆசிரியரின் பிற நூல்கள்

## தமிழ்

1. கன்யாசுல்கம் [தெலுங்கு நாடக தமிழாக்கம்]
2. சிலம்பில் சிறு பிழை [சிலப்பதிகார விமர்சனம்]
3. கற்பனைப் பொய்கை [கவிதைத் தொகுப்பு]
4. தரிசனம் [வசன கவிதை]
5. காதாசப்தசதி [பிராகிருதமொழிப்பேரிலக்கியம்]
6. நாகானந்தம் [வடமொழி நாடக தமிழாக்கம்]
7. வேமனு [வேமனு பொன்மொழிகள்]
8. ஆபுத்திரகாவியம் [பெருங்காவியம்]
9. தெரு [சிறு காவியம்]
10. காவிய மஞ்சரி [சிறு காப்பியத் தொகுதி]
11. களாபூரணோதயம் [தெலுங்கு காவிய தமிழாக்கம்]
12. ஜைன தத்துவம் [தத்துவ நூல்]

## தெலுங்கு

13. சைல கீதமு [குறிஞ்சிப்பாட்டின் தெலுங்காக்கம்]
14. முத்யால ஹாரமு [முத்தொள்ளாயிர தெலுங்காக்கம்]

## மலையாளம்

15. முத்தொள்ளாயிரம்



புரவலர்:
பி. கே. ராமசாமி ராஜா

பன்மொழிப் புலவர்
மு. கு. ஜகந்நாத ராஜா

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

# மகாவீரர் நெறி

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

# மஹாவீரர் நெறி

## 1. ரத்தினத்திரயம்

[உலகின் மிகப்பழமையான நாகரிக கலாச்சாரங்களை உடைய நமது பாரத நாட்டின் பண்பாட்டினை உருவாக்கிய நெறிகள் மூன்று. வேத தர்மம், பௌத்த தருமம், சமண தருமம் எனும் மூன்றின் திரிவேணி சங்கமமே இன்றைய நமது பாரதீய வாழ்நெறியாகும். இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகட்கு முன்பு பீகார் மாநிலத்தில் மகத நாட்டைச் சார்ந்த வைசாலி எனும் குறுநிலத்தை ஆண்ட மன்னனாகிய சித்தார்த்தனுக்கும், திரிசலா பிரியகாரிணி தேவிக்கும் அவதரித்த வர்த்தமான மஹாவீரர் இருபத்து நான்காவது தீர்த்தங்கரராகத் திகழ்ந்து அரசாட்சியை நீத்து, அருளாட்சியை மேற்கொண்டார். தொன்மையான சமண தர்மத்தைச் சீர்திருத்தி வலிவான அடிப்படையில் நிறுவிச் சென்றார். ஜைனம் என்றும், சமணம் என்றும் ஸ்யாத்வாத தர்சனம் என்றும், அனேகாந்தவாதம் என்றும் அவர் நெறிக்குப் பெயர்களாகும் ]

மனிதன் தன்னையும், தனக்கும், புறப்பொருளுக்கும் உள்ளதொடர்பையும் ஆய்வது தத்துவதரிசனமாகும். இவ் ஆய்வுக்கு இரு நோக்குகள் உள. அறிவியல் நோக்கும் ஆன்மீக நோக்கும் என இரு வகைப்படும். அறிவியல் நோக்கினராகிய சார்வாகர் மெட்டீரியலிஸ்ட்கள் பொருள் (Matter) ஒன்றே உள் பொருள் என்றும், மற்றவை கற்பனைகள் என்றும் கருதுவர்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



ஆன்மீக நோக்கினர் பரமான்மாவே உள் பொருள் என்றும், உலகு கற்பிதம் என்றும் கருதுவர். ஆன்மா மட்டுமே உள்பொருள் என்பாரும் உளர். உலகு அதாவது பொருள், உயிர் அதாவது ஆன்மா, இறை அதாவது பரமான்மா என்னும் முப்பொருளையும் ஏற்போரும் உண்டு.

மகாவீரர் நெறி உள்பொருளாக பொருள், ஆன்மா இரண்டையும் ஏற்று ஆன்மாவே பரமான்மா ஆகிறது என்று கருதுகிறது.

ஆன்மா பரமான்மா ஆவதற்கு ரத்தினத்திரயம் எனும் மும்மணிகளாகிய நற்காட்சி (சம்யக் தரிசனம்) நல்லறிவு (சம்யக் ஞானம்), நல்லொழுக்கம் (சம்யக் சாரித்ரம்) எனும் நன்னெறியை மஹாவீரர் நமக்கு அருளிச் செய்தார்.

தன்னைப்பற்றிய ஆன்மீக அறிவை நற்காட்சி என்றும், புறப்பொருள் பற்றிய அறிவை நல்லறிவு என்றும், தான் பெற்ற அறிவின்படி நன்னெறியில் ஒழுகுவது நல்லொழுக்கம என்றும் கூறுவர். பொருளின் பொதுத் தன்மையை உணருவது நற்காட்சி என்றும், சிறப்புத் தன்மையை உணருவது நல்லறிவு என்றும் கூறுவது உண்டு.

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று குறளாசிரியர் கூறுவதுபோல் அறிவு அல்லது தத்துவ ஞானம் செயற்படும்போதுதான, வாழ்வில்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


கடைப்பிடித்தொழுகும்போதுதான் அதன் பயனை அடைய முடியும். தீர்க்கதரிசிகள், மகாத்மாக்களின் உரைகளைப் பயில்வதாலும், பாராட்டுவதாலும் பயன் ஏற்படுவது இல்லை. அதைக் கடைப்பிடித்து ஒழுகுவதால்தான் பெரும் பயன் விளையும். இதை நன்குணர்த்தவே மஹாவீரர் அறிதலை விட ஒழுக்கத்திற்கு தனிச் சிறப்பளித்துள்ளார்.

ஆன்மா புத்கலமாகிய பொருளுடன் அனாதி காலந் தொட்டே பாலும் நீரும் போல் கலந்து இருக்கின்றது. அது பொருளின் தொடர்பை நீக்கி தனது சுயநிலையில் தனித்து இருப்பதையே விரும்புகிறது. அறிவும் ஆனந்தமும் உடைய தன சுயநிலை அடைய ஆன்மா கருமபந்தமாகிய பொருளின் தொடர்பை நீக்கி, விடுதலை (மோட்சம்) அடைய அது நற்காட்சி, நல்லறிவு மூலம் அறிவுற்று நல்லொழுக்கத்தின்படி மஹாவீரர் நெறியில் நின்று உய்வு பெறுதல் வேண்டும். மண்ணோடு மண்ணாகப் படிந்து கிடக்கும்பொன் துகள் ஆன்மாவைப் போன்றது. அது தன சுயநிலை அடைந்தாலன்றி ஒளி பெறுது. மணணோடு கலந்திருந்த பொன்னைச் சுட்டு உருக்கித் தனித் தங்கமாக்கி அதன் நிலையை அடைவித்தல்போல உலகோடு இரண்டறக் கலந்து நிற்கும் ஆன்மாவை இல்லறம், (சிராவக தருமம்) துறவறம் (முனி தருமம்) இரண்டின் மூலமும் பண்படுத்தி தூய ஆன்ம நிலையை அடைவித்தலாகிய வீடு பேறெய்துவதே பிறவிப் பயன் என்று மகாவீரர் கூறுகிறுர்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



## உ. பஞ்சாஸ்திகாயம்

விஞ்ஞானம் புறப்பொருள் எப்படி உள்ளது என்பதை விளக்குகிறது. மெய்ஞானம் அப்பொருள் ஏன் உள்ளது? என்பதை விளக்குகிறது. விஞ்ஞானமும், மெய்ஞானமும் விளக்கிய எல்லாக் கருத்தோட்டங்களையும் இணைவிக்கும் பாலமாக மகாவீரர் நெறி திகழ்கின்றது.

மகாவீரர் கண்ட அடிப்படைத் தத்துவங்கள் ஐந்து. இவ்வைந்தும் தனித்தனிப் பொருள்கள். முதலும் முடிவும் இன்றி பிரபஞ்சம் முழுதும் இடையறுது பரந்துகிடப்பன. எனினும் அவை ஒன்ருேடொன்று தொடர்புற்றுக் கிடக்கின்றன. இவ்வைந்தினை பஞ்சாஸ்திகாயம் என்பர். ஜீவன், புத்கலம், தர்மம், அதர்மம், ஆகாயம் என்பன அவை. இவற்றுள் ஜீவன் ஒன்று மட்டும் சைதன்யம் உடையது. அறிவும் உணர்வும் உடையது. மற்றவை ஜடங்கள் ஆகும். இவ்வைந்தினுள்ளும் புத்கலம் எனனும் பொருண்மை மட்டுமே உருவுடையது பருப்பொருளாகக் காணத்தக்கது. மற்றவை அருவங்களாகும்.

ஜீவன் எனப்படும் உயிர் தன்னையும் விளக்கிப் பொருள்களையும் விளக்கும் ஒளிபோல அறிவுமயமாகவும் ஆனந்த சொரூபமாகவும் அருவமாயும் உள்ளது. விளக்கின் ஒளியானது சிறிய அறையிலிருந்தால் அதற்கேற்ப வியாபித்து இருக்கிறது. பெரிய அறை யிலிருந்தாலும் அதற்கேற்ப வியாபித்திருக்கிறது. அதுபோலவே ஜீவன் எறும்பின் உடலிலிருந்தாலும்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


யானையின் உடலில் இருந்தாலும் அவ்வுடலுக்கு ஏற்ப தன்னை வியாபகப்படுத்திக்கொள்கிறது. இந்த ஜீவன் அதாவது உயிர் அணுதியானது. எண்ணற்றது. உயிர் பொருளோடு கூடி வினையாற்றுதலே கருமம் எனப்படும். இக் கருமத்தினுல் பிறப்பை எடுக்கிறது.

[ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நான்கறிவுயிர் ஐந்தறிவுயிர் என்று உயிர்களைப் பாகுபடுத்துவது சமண நெறியாகும், அண்டஜம் (முட்டையிற் பிறப்பது) ஜராயுஜம் (குடலிற் பிறப்பது), உத்பிஜம் (முளை விடுவது) ஸ்வேதஜம் (வேர்வையில் பிறப்பது) என்று உயிர்களை நான்காகப் பிரிப்பது வேத நெறி. புலன் அறிவை ஒட்டி உயிர்களைப் பிரிப்பது சமண நெறியாகும்.]

தொல்காப்பியர் சமண நெறிப்படி உயிர்களைப் பிரித்து உணர்த்துகிறுர் என்பதையும் நாம் அறிய வேண்டும் இவ்வுயிர்கள் வீடுபேறடையும்வரை பல்வேறு பிறப்பை எடுக்கும் என்பது சமணர் கொள்கையாகும்.

புத்கலம் எனப்படும் பொருள் உருவுடையது. அணுக்களால் ஆனது; அணுதியானது; அடிப்படையான அணுரூபமான பொருள் நித்தியமானது. எனினும் இப் பொருள் காலத்தின் பிரபாவத்தால் தோற்றம் அழிவுகளையுடையதாக சதாமாற்றமடைந்துகொண்டே இருக்கிறது. ''உத் பாத வ்யயத்ரெளவ்யம்'' புத்கல தருமமாகும். இப்பொருளின் நுண் துகள்களான பரமாணு தனித்து இருப்பதில்லை. ஈரணு, மூவணு, நான்கணு என்று கூட்டுப் பொருளாகவே இருக்கிறது. மூலக் கூறுகளான

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



Malucule எனப்படும் இப் பொருளை ஸ்கந்தம் என்று சமணம் கூறுகிறது. சமண நெறியின் இப்பொருளைப் பற்றிய நுணிகிய ஆய்வு இன்றைய விஞ்ஞானத்தினர் கண்ட முடிவுகளுக்கு ஏற்ப வியப்பளிக்கிறது நமது மெய்ஞானம் எத்தகைய சிறப்புடன் திகழ்ந்தது எனக் காண முடிகிறது. தருமம், அதருமம் என்பவை சமண நெறியில் தனிப் பொருள் வாய்ந்தவையாகும். மீன் ஊடாடிச் செல்வதற்கு நீர் துணைபுரிவதுபோல உயிரும் பொருளும் இயங்குவதற்கு துணை புரியும சக்தி தத்துவத்தை தருமாஸ்திகாயம் என்று கூறுவர்.

இதற்கு எதிரிடையாக அதருமாஸ்திகாயம் என்பது பொருள்கள் இயக்கமின்றி ஓரிடத்தில் நிலைத்திருக்கும் ஆற்றலாகும். 17ம் நூற்றாண்டில் நியூட்டன் கண்டுபிடித்த புவிஈர்ப்பு தத்துவத்தையே அதருமாஸ்திகாயம் என்று கூறியுள்ளார் என்பது புலனாகிறது. ஆகாயம் என்பது Space எனப்படும் இடத் தத்துவமாகும். பொருளின் இருப்புக்கு இடம் தந்து உதவுவது ஆகாயம் ஆகும். இந்த பஞ்சாஸ்திகாயங்களுடன் கால தத்துவத்தையும் கூட்டி 'ஷட்திரவியம்' என்றும் வழங்குவர்.

மஹாவீரர் நெறியில் இந்த ஐந்து தத்துவங்களையும் ஐயந்திரிபற உணர்வதே நல்லறிவாகும்.

நல்லொழுக்கத்திற்கு இவ்வறிவே அடிப்படையாகும். ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல நல்லறிவும் நல்லொழுக்கமும் சமண நெறியில் ஒன்றை ஒன்று சார்ந்த இன்றியமையாத பண்புகளாகும.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


ஒலி ஆகாயத்தின் குணம் என்று பிறர் கூறியபோது ஒலி பொருளின் குணம்தான் என்றும் அன்றே நிருபித்தனர். மின்னலும், இடி முழக்கமும் ஒரே சமயத்தில் பிறந்தாலும் ஒளி வந்து கண் புலனை அடைந்த சிறிது நேரம் கழித்து ஒலி செவிப் புலனை அடைவதையும் உவமையாகக் காட்டி இதனை உணர்த்தி யுள்ளனர்.

16ம் நூற்றுண்டினராகிய பிரெஞ்சு தத்துவ ஞானி டேக்கார்டேயும் பொருளின் இன்றியமையாப் பண்பு (Extension) எனும் பரப்புடமையாகிய இடத்தை நிரப்புதல் என்றுகூறுவார். சமணத்தில்பொருண்மையை கடந்த ஆகாயமும் உண்டு. பொருளும் ஜீவனும தருமா தருமங்களும் இயங்கும் லோகாகாசம் என்றும் இவற் றினைக் கடந்து சிந்தைசெல்லா சேணெடுந்தூரத்ததாகிய அந்த மற்ற பிரபஞ்சவெளியை அலோகாகாசம என்றும் கூறுவர்.

பரமாணுக் கொள்கை தனி அணு இன்றி ஈரணு முதலாக கூட்டுப் பரமாணுக்களே உள்ளன என்ற கொள்கை, ஒலி பொருட்தன்மை வாய்ந்தது, புவி ஈர்ப்பு ஆற்றல் (அதர்மாஸ்திகாயம்) முதலிய விஞ்ஞான உண்மைகளை இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகட்கு முன்னே மெய்ஞானத்தின் மூலம் கண்டறிந்த சமண தத்துவத்தின் சிறப்பு நம்மை வியப்பிலாழ்த்துகிறது.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



## 3. சியாத்வாதம்

உலகிலுள்ள பிற நெறிகளுக்கும், மஹாவீரரது நெறிக்கும் ஒரு அடிப்படை வேற்றுமை உண்டு. பிற நெறியினர் தமது கருத்துக்களை முடிந்த முடிவாக சித்தாந்தமாகக் கருதுவார்கள். மஹாவீரர் நெறி மட்டும் இதற்கு மாறாக உண்மைக்கு முடிந்த முடிவு என்பது ஒன்றில்லை என்றும் ஒரு சார்புநிலைக் கோணத்திலிருந்து அந்த முடிவு ஏற்பட்டதேயன்றி அதுவே முற்ற முடிந்த முடிவல்ல, உண்மைக்குப் பல கோணங்கள் உண்டு. பல சார்புடைய முடிவுகளும் உண்டு என்றும் விளக்கும். இக் கருத்தோட்டத்திற்கு சியாத்வாதம் அனேகாந்த வாதம் என்று பெயர்.

மாபெரும் விஞ்ஞானி ஐன்ஸ்டீன் புறப்பொருள் விஞ்ஞான ஆய்வில் 'ரிலேடிவிடி' எனும் சார்புநிலைக் கோட்பாட்டைக் கண்டது போல மஹாவீரர் மெய்ஞான ஆய்வில் 'சியாத்வாதம்' எனும் சார்புநிலைக்கோட்பாட்டை உருவாக்கினர்.

மெய்ப்பொருளைக் காண சார்பு நிலையிலிருந்துதான் முடியும். சார்பு நிலையின் மூலமே உண்மையின் ஒளி வீச்சை உணர முடியும். எனது அனுபவம், நான் காணும் கோணம் இவற்றின் மூலம் நான் பெறும் உண்மை ஒருவேளை நிச்சயமுடையதாகலாம் என்று கருதும் கருத்தோட்டம் சியாத்வாதமாகிறது. 'சியாத்' என்ற வடமொழி இடைச்சொல் ஆல், ஆயின், ஒருவேளை என்ற பொருள் தரும் அசைச் சொல் ஆகும்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



'விண்மீன்களைக் காண முடியுமா?'' என்ற கேள்விக்கு பகலாக இருந்தால் ''காண முடியாது'' என்றும், இரவாக இருந்தால் ''காண முடியும்'' என்றும் பதில் வரும், இந்த விடை பகலா இரவாஎன்ற சார்புநிலைகொண்டுதான் கூற முடியும்.

ஒரு மனிதன் அவனது தந்தைக்கு மகனாகவும், அவனது மகனுக்கு தந்தையாகவும் இருக்கிறான். அதே மனிதன் ஒவ்வொருவருக்கும் ஒருவித உறவுடையவனாகிறான். அம்மனிதன் தந்தையா? மகனா? சகோதரனா? என்பது சார்புநிலைகொண்டேதான் விளக்க முடியும.

எழிலார்ந்த புல் நுனியில் பனித் துளி இருக்கிறது, காலைச் செஞ்சுடரின் பொற் சுடர்பட்டு மின்னுகிறது. முத்துப் போல வெண்மையாகவும் தோன்றுகிறது. மரகதப் பச்சையாக மாறுகிறது. செம்பவளமாகத் திகழ்கின்றது. நீல நிறமாகக் கோலம் காட்டுகின்றது. உண்மையில்பனித்துளியின் நிறம் யாது? நாம்பார்க்கும் இடச்சார்புக்கும் பார்க்கும் கோணத்திற்கும் ஏற்பவே அதன் நிறம் இருக்கும்.

பார்வையற்ற சிலர் யானையைக் கண்ட கதை பிரசித்தமானது. காதைத் தடவிப்பார்த்தவன் முறம் போன்றது என்றான். துதிக்கையைத் தடவிப் பார்த்தவன் உலக்கை போல் இருக்கிறது என்றான். வயிற்றைத் தடவியவன் சுவர் போன்றது என்றான். இதுபோலவே உண்மையின் ஏதோ ஒரு பகுதியைக் கண்டவர்கள் அதுவே உண்மை என்று ஒரு சார்பு நிலையிலிருந்து கூறுகின்றனர்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


## 3. ஸ்யாத்வாதம்

உலகிலுள்ள பிற நெறிகளுக்கும், மஹாவீரரது நெறிக்கும் ஒரு அடிப்படை வேற்றுமை உண்டு. பிற நெறியினர் தமது கருத்துக்களை முடிந்த முடிவாக சித்தாந்தமாகக் கருதுவார்கள். மஹாவீரர் நெறி மட்டும் இதற்கு முரணாக உண்மைக்கு முடிந்த முடிவு என்பது ஒன்றில்லை என்றும் ஒரு சார்புநிலைக் கோணத்திலிருந்து அந்த முடிவு ஏற்பட்டதேயன்றி அதுவே முற்ற முடிந்த முடிவல்ல, உண்மைக்குப் பல கோணங்கள் உண்டு. பல சார்புடைய முடிவுகளும் உண்டு என்றும் விளக்கும். இக் கருத்தோட்டத்திற்கு சியாத்வாதம் அனேகாந்த வாதம் என்று பெயர்.

மாபெரும் விஞ்ஞானி ஐன்ஸ்டீன் புறப்பொருள் விஞ்ஞான ஆய்வில் 'ரிலேடிவிடி' எனும் சார்புநிலைக் கோட்பாட்டைக் கண்டது போல மஹாவீரர் மெய்ஞான ஆய்வில் 'சியாத்வாதம்' எனும் சார்புநிலைக்கோட்பாட்டை உருவாக்கினார்.

மெய்ப்பொருளைக் காண சார்பு நிலையிலிருந்துதான் முடியும். சார்பு நிலையின் மூலமே உண்மையின் ஒளி வீச்சை உணர முடியும். எனது அனுபவம், நான் காணும் கோணம் இவற்றின் மூலம் நான் பெறும் உண்மை ஒருவேளை நிச்சயமுடையதாகலாம் என்று கருதும் கருத்தோட்டம் சியாத்வாதமாகிறது. 'சியாத்' என்ற வடமொழி இடைச்சொல் ஆல், ஆயின், ஒருவேளை என்ற பொருள் தரும் அசைச் சொல் ஆகும்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



'விண்மீன்களைக் காண முடியுமா?'' என்ற கேள்விக்கு பகலாக இருந்தால் ''காண முடியாது'' என்றும், இரவாக இருந்தால் ''காண முடியும்'' என்றும் பதில் வரும், இந்த விடை பகலா இரவாஎன்ற சார்புநிலைகொண்டுதான் கூற முடியும்.

ஒரு மனிதன் அவனது தந்தைக்கு மகனாகவும், அவனது மகனுக்கு தந்தையாகவும் இருக்கிறான். அதே மனிதன் ஒவ்வொருவருக்கும் ஒருவித உறவுடையவனாகிறான். அம்மனிதன் தந்தையா? மகனா? சகோதரனா? என்பது சார்புநிலைகொண்டேதான் விளக்க முடியும.

எழிலார்ந்த புல் நுனியில் பனித்துளி இருக்கிறது, காலைச் செஞ்சுடரின் பொற் சுடர்பட்டு மின்னுகிறது. முத்துப் போல வெண்மையாகவும் தோன்றுகிறது. மரகதப் பச்சையாக மாறுகிறது. செம்பவளமாகத் திகழ்கின்றது. நீல நிறமாகக் கோலம் காட்டுகின்றது. உண்மையில்பனித்துளியின் நிறம் யாது? நாம்பார்க்கும் இடச்சார்புக்கும் பார்க்கும் கோணத்திற்கும் ஏற்பவே அதன் நிறம் இருக்கும்.

பார்வையற்ற சிலர் யானையைக் கண்ட கதை பிரசித்தமானது. காதைத் தடவிப்பார்த்தவன் முறம் போன்றது என்றான். துதிக்கையைத் தடவிப் பார்த்தவன் உலக்கை போல் இருக்கிறது என்றான். வயிற்றைத் தடவியவன் சுவர் போன்றது என்றான். இதுபோலவே உண்மையின் ஏதோ ஒரு பகுதியைக் கண்டவர்கள் அதுவே உண்மை என்று ஒரு சார்பு நிலையிலிருந்து கூறுகின்றனர்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



அவர்கள் கூறியது தவறல்ல. உண்மைதான். ஆனால் அது முற்றமுடிந்த முடிவல்ல. உண்மைக்குப் பல முடிவுகளும் உண்டு. பல்வேறு முடிவுகளை இணைப்பதன் மூலமே முழு உண்மையைக் காண முடியும். அதுவும் சார்புநிலை மூலமேயாகும்.

கருத்து முரண்பாடுகள் கட்சிகளாகி மனிதனை மனிதன் வெறுத்து போருக்கும், பனிப் போருக்கும் இலக்காகி அமைதியும், முன்னேற்றமும் இன்றி அவல முறும் இன்றைய உலகிற்கு 'சியாத்வாதம்' நல்வழி காட்டும் அருமருந்தாகும். பிறர் கருத்துக்களிலும் ஒரு சார்பு மெய்மை இருக்கும் என்ற கருத்து நமக்கு ஏற்பட வேண்டும் பிற கருத்துக்களை தழுவிச் சென்று இணக்கமான நடுநிலைப் பார்வையுடன் புத்துலகமானுட சமுதாயத்தைப் படைக்க வேண்டும என்ற எண்ணம் ஏற்பட வேண்டும். இதற்குத் தடையாயிருப்பது சித்தாந்த வெறிகளாகும்.

சித்தாந்த வெறிகள் நீக்கி கருத்துக்களை இணை விப்பது சியாத்வாதமாகும். தத்தம் கருத்து நிலையில் உறுதிப்பாடு இருக்கக் கூடாது என்று சியாத்வாதம் கூறவில்லை. அந்த உறுதிப்பாடு சார்பு நிலையில்தான் என்ற பேருண்மையை உணர வேண்டும். தத்துவ வாதத்தில் இருபெரும் பிளவுகளாயுள்ள பொருள் முதல் வாதத்தையும், கருத்துமுதல்வாதத்தையும் இணைவிக்கும் பாலமாக இருப்பது சியாத்வாதமாகும்.

தற்காலத்தில் முன்னிலும் அதிகமான சிக்கல்மிக்க

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



கருத்தோட்டங்கள் இருப்பதால் கருத்திற்காக மனிதன் அல்ல; மனிதனுக்காகத்தான் கருத்துக்கள் என்ற நிலை ஏற்பட்டு உலக சமாதானம் உருவாக மஹாவீரர் கண்ட சிறப்பு நெறியாகிய சியாத்வாதமே உதவும் என்பதில் ஐயமில்லை.

## 4. அணுவிரதம்

மஹாவீரர் நெறிப்படி நல்லொழுக்கம் இரு வகைப் படும். இல்லற நெறி, துறவற நெறி என்பனவாகும். சமுதாய ஒழுக்கத்திற்கு அடிப்படை இல்லறமேயாகும். மனிதன் கூடி வாழ வேண்டியவன். ஆகையால் வாழ் வாங்கு வாழ சில நெறி முறைகளை கைக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். தானும் வாழ்ந்து பிறரையும் வாழ வகுப்பது நல்லறமாகும். அந்நல்லறக் கோட்பாடுகளை கடைப்பிடித்தலே விரதம் எனப்படும். இல்லறத்தான் அணுவிரதம் எனும் பஞ்சசீலத்தைக் கைக்கொண்டொழுக வேண்டும். அவை அஹிம்சை எனும் கொல்லாமை, சத்தியம் எனும் பொய்யாமை, அஸ்தேயம் எனும் கள்ளாமை, பிரமச்சரியம் எனும் பிறன்மனை நோக்காத பேராண்மை, பரிமித பரிக்கிரகம் எனும் மிகுபொருள் விழையாமை எனும் ஐந்தாகும்.

அஹிம்சை என்பது ஓரறிவுயிராகிய தாவரங்களை ஒழித்து ஈரறிவு முதல் ஐந்தறிவுடைய உயிர்களைக் கொல்லாமை, மனம், வாக்குகாயத்தால் தீங்கு செய்யாமை யாகும். உயிர்களைச் சிறைப்படுத்தலும், அடித்தலும்,

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



சித்ரவதை செய்தலும், தாங்கரிய சுமை ஏற்றுதலும், உணவு, நீர்களைத் தராமல் தடுத்தலும் ஆகியவையும் கூடாது.

சத்தியம் என்பது வாய்மையாகும். அன்பினுலோ மோகத்தாலோ, வெறுப்பாலோ பொய் பேசாதிருத்தலும், பிறருக்குதுன்புறுத்தலை நோக்கமாகக் கொண்ட உண்மை பேசுவதைத் தவிர்த்தலுமாகும். பிறருக்குத் துன்பம் தரும் உண்மை பொய்மையின்பாற்பட்டதேயாகும். மேலும், புறங்கூறுதல், கோள் சொல்லுதல், பொய்க்கையெழுத் திடுவது, பொய் தஸ்தாவேஜு தயாரிப்பது, அடைக்கலப் பொருளை அவன் மறந்து விட்டால் தராமல் இருப்பது ஆகியவையும் பொய்மையின் பாற்படும். இவைகள் நீக்குவதே வாய்மையாகும்.

கள்ளாமை என்பது பிறர் நமக்குத் தராத பொருள்களும், கீழே வீழ்ந்திருக்கும் பொருள்களும், மறந்துபோன பிறர் பொருள்களையும் நாம ஏற்றுக் கொள்ளாதிருத்தலாகும்.

பிறனை திருட்டுக்கு ஏவுதலும், போர், கலகம் இவற்ருல் அழிக்கப்பட்ட நாடுகளின் பொருட்களை கவர்தலும், பிறருக்குத் தரும்போது குறைவாயும், தனக்குப் பெறும்போது அதிகமாயும் பொருளை அளத்தலும், தங்கத்தில் செம்பு, பாலில் நீர் போன்று கலப்படம் செய்தலும் ஆகியவையும் திருட்டேயாகும். இவையும் விலக்க வேண்டும்.

பிரமச்சரியம் என்பது பிறன்மனை, விதவை, கணிகை

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


கன்னிப்பெண், பேடி முதலியவர்தம் புணர்வை நீக்குதல் ஆகும். தன் மனையிடமும் அளவோடமைதலும் ஆகும்.

பரிமிதபரிக்கிரஹம் என்பது நிலம், இல்லம், தனம், தானியம், கருவிகள், பசுக்கள் முதலிய செல்வங்களை அளவோடு பெறுதலும், அனுபவித்தலும் ஆகும். சமுதாயத்தின் மூலம் உருவாகும் செல்வத்தை அபரிமிதமாக ஒருவன் சேர்த்து வைத்துக்கொள்வதால் ஏற்படும் தீங்கை இன்று சமுதாயத்தில் கண்கூடாக காண்கிறோம். ஒரு பக்கம் செல்வம் அளவிறந்து சேர்ப்பதால் மறு பக்கம் வஞ்சிக்கப்பட்ட மக்கள் வறுமைப் படுகுழியில் தள்ளப்படுகின்றனர். இக் கொடுமை நீங்க ராபர்ட் ஓவன், காரல்மார்க்ஸ் முதலிய சிந்தனையாளர்கள் சோஷலிச தத்துவங்களை உலகிற்கு வழங்கினர். நபிகள் நாயகமும் வட்டி வாங்குவது பாவம் எனத் தவிர்த்தும், சக்காத் (Zagaat) எனும் தானமும் விதித்துள்ளார்.

மஹாவீரர் தொல் நெடுங் காலத்துக்கு முன்பே செல்வம் அபரிமிதமாகச் சேர்ப்பது பாவம் என்றும், சேர்த்த பொருளையும் தானம் செய்யாதிருப்பதும் பாவம் என்றும் விதித்திருப்பது அவரது தீர்க்கதரிசனத்தைக் காட்டுகிறது.

கள்ளுண்ணாமை, புலால் உண்ணாமை, தேன் உண்ணாமை, இரவில் உண்ணாமை ஆகிய விரதங்களும் மகாவீரர் நெறியில் விதிக்கப்பட்ட ஒழுக்கங்களாகும்.

"அஹிம்சோ பரமோதர்ம" என்பது எல்லா நெறியினரும் ஏற்பினும், எதிரிகளிடமும் அஹிம்சையுடன்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



இருக்க வேண்டும் என்பதை ஏசுகிறிஸ்துவும், புத்தனும் கூறினும், எந்த ஒரு சிற்றுயிர்க்கும் தீங்கு செய்ய லாகாது என்பதில் மிக்க விழிப்புடன் அஹிம்சையை ஏற்ற நெறி மகாவீரர் நெறியேயாகும். சிற்றெறும்புக்கும் ஊறு நேராதவாறு நடப்பதும், தம் உடலை வருத்தி பிறர் உயிர்க்குத் தீங்கு நேராது பாதுகாக்கும் பண்புடன் ஒழுகுவதும் மஹாவீரர் நெறியின் சிறப்புக்களாகும்,

வாழ்க்கையின் நோக்கமே பணம் சேர்ப்பதுதான் என்ற போக்கில் இன்று உலகம் ஆடம்பரத் தேவைகளை அதிகமாக்கிக்கொண்டு அல்லலுறுவதைக் காண்கிறோம். மன நிம்மதியிழந்து, பிறரைச் சுரண்டி வாழும் பணப் பேராசையில் உழலும் உலகுக்கு மகாவீரர் காட்டிய 'பரிமிதபரிக்கிரகம்' எனும் அளவோடு செல்வம் சேர்த்தல் எனும் கொள்கையே சிறந்த மாற்றாகும். இதுவே அஹிம்சைக்கு மூலமும் ஆகும்.

பாம்புப்பட நிழலில் படுத்துறங்கும் தேரை போல இருக்கும் நாமும் அணு யுகத்தின் போர் மேகங்கள் அடிக்கடி எழுந்து உலவும் நமது உலகும் அமைதியுற வேண்டின் மகாவீரரின் இந்த ஐந்து மகாவிரதங்களையும் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டியது இன்றியமையாத தாகும்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



# 5. நவபதார்த்தம்

"ஆனை துரப்ப அரவுறை ஆழ்குழி
நானவர் பற்றுபு நாலும் ஒருவன் ஓர்
தேனின் அழிதுளி நக்கும் திறத்தது
மானுட வாழ்க்கை மதித்தனைக்கொள் நீ"

என்று சமண நூலாகிய சூளாமணியில் தோலாமொழித் தேவர் கூறியதுபோல மனித வாழ்க்கையில் துன்பங்களே மிகுதியாகும். இன்பம் மிகக்குறைவாகும். யானை துரத்தி வரவே ஒடிய ஒரு மனிதன் பாம்புகள் நிறைந்த பாழுங் கிணற்றில் விழப்போய் தற்செயலாக அங்கே ஆல விழுது தொங்கவே அதைப்பற்றிக்கொண்டு ஜீவமரணப் போராட்டத்தில் தத்தளிக்கும்போது, மரத்தின் மேலே கரடியினுல் கலைக்கப்பட்ட தேன் கூடு சிதைந்து, தேன் ஒழுகி, அ,வன் நாவில்பட, அதைச் சுவைத்து "ஆகா! என்ன இனிமை" என்று மகிழ்வது போன்றதே மனித வாழ்வின் இன்பம். ஆகையால் புலன் இன்பங்களை நம்பி அழியாத ஆன்மீக இன்பங்களை இழந்து விடுவதுகூடாது.

"பாலையாம் தன்மை செத்தும்
பாலனும் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
காமுறு இளமை செத்தும்
மீளும்இவ் வியல்பாய் இன்னே
மேல்வரு மூப்பு மாகி
நாளும்நாம் சாகின் ருேமால்
நமக்கு நாம் அழாததேனே?"

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


என்று குண்டலகேசி கூறுவது போல இளமை நிற்பது இல்லை. வாழ்நாளில் பாதியும் உறங்கிப்போகும். பேதை பாலனுகிச் சிலநாள் கழியும். மீதியில் பிணி, மூப்புத் துன்பங்கள் வேறு. ஆகையால் இந்த வாழ்வினை நம்பி நாம் பிறரைத் துன்புறுத்தி அறநெறி மறந்து, பணம் சேர்த்தலே வாழ்வின் குறிக்கோள் எனத்திரிந்து முடிவில் பெறும் பயன் என்ன? துன்பமின்றி தொழுதகைய தென்ன?

இன்ப துன்பம் எனும் இரு வினைகளையும் நீத்து தன்னலப் பற்றற்று பொதுநலக் கடமைகளால் பெறும் தூய எளிய இனிய வாழ்க்கையைப் பெற்று மனிதன் வீடுபேறுற வேண்டும். ஜீவன், அஜீவன், புண்ணியம், பாவம், ஆஸ்ரவம், சம்வரம், நிர்ஜரம், பந்தம், மோட்சம் எனும் ஒன்பது தத்துவங்களை நன்குணர்ந்து மனிதன் வீடு பேறுற வேண்டும்.

நல்வினை, தீவினைகளாகிய புண்ணிய பாவங்கள் அதற்குரிய பலனை ஈந்தே தீரும், தினை விதைத்தவன் தினைதான் அறுப்பான். அவரை விதைத்து துவரை பெற முடியாது. தன் தன் வினைப் பயனை அனுபவித்தே தீர வேண்டும் என்று மஹாவீரர் அறுதியிட்டுக் கூறுகிறார். தீய வினை செய்துவிட்டு அதன் பலனை அனுபவிக்காமல் கடவுளைப் பூசனைகள்செய்து மன்னிப்பு பெற்று பக்தியின் நிழலில் ஒதுங்கி தப்பித்து விடலாம். என மனக்கோட்டை கட்டுவது நிச்சயம பலனளிக்காது. என்று மகாவீரர் கூறுகிறார். இரு வினைப் பயனும் நிழல்போல வந்து பயன் ஊட்டியே தீரும். இக் கருத்து

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


மனிதன் ஒழுக்கத்திற்கு அஞ்சி நடக்கவேண்டும் என்பதை உணர்த்துகிறது. குளத்து நீரை வற்றச்செய்ய நீர் வரும கால்வாய்களை அடைத்து விடுவது போல மேன் மேலும் வினைகளாற்ருமல் தடுத்து, பிற உயிர்க்குத் தீங்கு செய்யாமல் தன் துயர் தாங்கிக்கொண்டு தவம் ஆற்றி பந்தத்தினை நீக்கி வீடுபேறடைவதே பிறவியின் நோக்க மாகும் என்பது மஹாவீரர் நெறியாகும்.

மனிதன் ஒழுக்க நெறியில் நடந்தாலன்றி இந்த சமுதாயம் சீர்திருந்த முடியாது. ஒழுக்க நெறிக்கு அடிப்படை எளிய வாழ்வாகும். தோரோ, மகாத்மா காந்தியடிகள் முதலியோர் தம் வாழ் நாளில் எளிய வாழ்க்கை வாழ்ந்துகாட்டி அதன்மூலம் இன்ப வாழ்வினை வாழ முடியும் என்று காட்டினர். மகாவீரர் இந்த எளிய வாழ்க்கையைத்தான் துறவு மூலம் உருவாக்கியுள்ளார். ஆடம்பர வாழ்வின் அவலங்களைக் கண்கூடாகக்காணும் நாம் எளிய வாழ்க்கையின் நன்மைகளை உணருகிறோம். எனினும் பழக்கத்திற்கு அடிமைப்பட்ட நம் உடல் தேவைகளை நீக்குவது கடினம். எனினும் எதிர்கால உலகில் அமைதியுடைய சமுதாயம் தோன்ற மகாவீரர் காட்டிய எளிய வாழ்க்கைத்தத்துவம் இன்றியமையாதது ஆகும்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


என்று குண்டலகேசி கூறுவதுபோல இளமை நிற்பது இல்லை. வாழ்நாளில் பாதியும் உறங்கிப்போகும். பேதை பாலனாகிச் சிலநாள் கழியும். மீதியில் பிணி, மூப்புத் துன்பங்கள் வேறு. ஆகையால் இந்த வாழ்வினை நம்பி நாம் பிறரைத் துன்புறுத்தி அறநெறி மறந்து, பணம் சேர்த்தலே வாழ்வின் குறிக்கோள் எனத்திரிந்து முடிவில் பெறும் பயன் என்ன? துன்பமின்றி தொழுதகைய தென்ன?

இன்ப துன்பம் எனும் இரு வினைகளையும் நீத்து தன்னலப் பற்றற்று பொதுநலக் கடமைகளால் பெறும் தூய எளிய இனிய வாழ்க்கையைப் பெற்று மனிதன் வீடுபேறுற வேண்டும். ஜீவன், அஜீவன், புண்ணியம், பாவம், ஆஸ்ரவம், சம்வரம், நிர்ஜரம், பந்தம, மோட்சம் எனும் ஒன்பது தத்துவங்களை நன்குணர்ந்து மனிதன் வீடு பேறுற வேண்டும்.

நல்வினை, தீவினைகளாகிய புண்ணிய பாவங்கள் அதற்குரிய பலனை ஈந்தே தீரும், தினை விதைததவன் தினைதான் அறுப்பான். அவரை விதைத்து துவரை பெற முடியாது. தன்தன் வினைப் பயனை அனுபவித்தே தீர வேண்டும் என்று மஹாவீரர் அறுதியிட்டுக் கூறுகிறார். தீய வினை செய்துவிட்டு அதன் பலனை அனுபவிக்காமல் கடவுளைப் பூசனைகள்செய்து மன்னிப்பு பெற்று பக்தியின் நிழலில் ஒதுங்கி தப்பித்து விடலாம். என மனக்கோட்டை கட்டுவது நிச்சயம பலனளிக்காது. என்று மகாவீரர் கூறுகிறார். இரு வினைப் பயனும் நிழல்போல வந்து பயன் ஊட்டியே தீரும். இக் கருத்து

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


மனிதன் ஒழுக்கத்திற்கு அஞ்சி நடக்கவேண்டும் என்பதை உணர்த்துகிறது. குளத்து நீரை வற்றச்செய்ய நீர் வரும கால்வாய்களை அடைத்து விடுவது போல மேன் மேலும் வினைகளாற்ருமல் தடுத்து, பிற உயிர்க்குத் தீங்கு செய்யாமல் தன் துயர் தாங்கிக்கொண்டு தவம் ஆற்றி பந்தத்தினை நீக்கி வீடுபேறடைவதே பிறவியின் நோக்க மாகும் என்பது மஹாவீரர் நெறியாகும்.

மனிதன் ஒழுக்க நெறியில் நடந்தாலன்றி இந்த சமுதாயம் சீர்திருந்த முடியாது. ஒழுக்க நெறிக்கு அடிப்படை எளிய வாழ்வாகும். தோரோ, மகாத்மா காந்தியடிகள் முதலியோர் தம் வாழ் நாளில் எளிய வாழ்க்கை வாழ்ந்துகாட்டி அதன்மூலம இன்ப வாழ்வினை வாழ முடியும் என்று காட்டினர். மகாவீரர் இந்த எளிய வாழ்க்கையைத்தான் துறவு மூலம் உருவாக்கியுள்ளார். ஆடம்பர வாழ்வின் அவலங்களைக் கண்கூடாகக்காணும் நாம் எளிய வாழ்க்கையின் நன்மைகளை உணருகிருேம். எனினும் பழக்கத்திற்கு அடிமைப்பட்ட நம் உடல் தேவைகளை நீக்குவது கடினம். எனினும் எதிர்கால உலகில் அமைதியுடைய சமுதாயம் தோன்ற மகாவீரர் காட்டிய எளிய வாழ்க்கைத்தத்துவம் இன்றியமையாதது ஆகும்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


## 6. வாழ் நெறி

உலகிலுள்ள எல்லா நூல்களின் சாரத்தையும் ஒரு பாட்டிலல்ல அரைப்பாட்டிலேயே சொல்கிறேன் என்று ஒரு கவிஞன் கூறுகிறான்.

ஸ்லோகார்த்தேன ப்ரவக்ஷ்யாமி யதுக்தம்
க்'ரந்தகோடிபி'

பரோபகாராய புண்யாய பாபாய பரபீடணம்

என்று அவன் கூறுகிறான். பிறருக்கு உதவுவதே புண்ணியம். பிறருக்கு தீங்கிழைத்தலே பாவம். இந்த அறநெறியே எல்லா நூல்களின் சாரம் ஆகும். மகாவீரர் இதையே வற்புறுத்திக் கூறுகிறார். எந்த உயிராயினும் இரங்குதல் வேண்டும் என்பதே அவர் நெறியின் முக்கிய அடிப்படையாகும். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலார் நெஞ்சும், சிறு முல்லைக் கொடிக்காக தன் பொன்தேரை அளித்த பாரி வள்ளலின் உள்ளமும், பாலைவனத்தில் தன் கூடாரத்தில் குருவி கூடு கட்டிவிட்டது என்பதற்காக அதைக் கலைக்க மனமின்றி சுடுமணலில் நடந்து துயர்படுவது அஞ்சாது கூடாரத்தையே விட்டுச் சென்ற அரேபிய மன்னனின் மனமும் தன் பொற்சரிகை, உத்தரீயத்தில் தூங்கிய பூனைக்குட்டியை எழுப்ப மனமின்றி உத்தரீயத்தின் முனையை கத்திரியால் கத்தரித்து விட்டு வெளிவந்த நபிகள் நாயகத்தின் அருள் உள்ளமும், சிலுவையில் செங்குருதி பொழிய "பகைவரை மன்னிக்க வேண்டும்" என்று இறைஞ்சிய ஏசுவின் தூய இதயமும்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


சம்ப்ப தகினயட்டி சத்ருவு தனசேத
சிக்க னேனி கீடு ஸேய ராது
பொஸக மேலு சேஸி பொம்மனுடே சாலு"

என்றுபகைவனுக்கும் அருள் செய்ய வேண்டும் என்ற வேமனுவின் பண்புள்ளமும் நமக்கு எடுத்துக்காட்டுவது இதுதான். மஹாவீரர் கூறுகிறார். பிற உயிர்களை நேசித்தல் வேண்டும். இதுவே எல்லா அறத்திற்கும் அடிப்படையாகும். துன்பக்கடலில் தவிக்கும் மனிதனுக்கு அறம் என்ற தீவுதான் சரண் அளிக்கும்.

நல்ல ராஜபாட்டையில் செல்லாமல் முட்புதர் நிறைந்த பாதைகளில் செல்பவன் துயர்உறுவதுபோல அறநெறி பிறழ்பவன் துன்பத்தில் உழல்வான். மனிதனுடைய குறிக்கோள் புலனின்பங்கள் அல்ல. சுவர்க்க சுகமும் அல்ல. அவன் குறிக்கோள் அறத்தின் இன்பம். ஆன்மாவின் இன்பம் ஆகும். மனிதனின் பண்பு அறிவுகளே சமுதாயத்தில் அவனுக்குரிய அந்தஸ்தைத் தருமன்றி குலமோ குடிப்பிறப்போ அல்ல.

முன்வினைப் பயனாகிய நோய், துயர்களை பொறுமையுடன் அனுபவித்து விட்டு, மீண்டும் அத்தகைய துயர் நேராவண்ணம் விழிப்புடன் இருக்க வேண்டும். எல்லாப் பாவங்களுக்கும் மூல காரணமாவது சினம். முதலில் அதனை நீக்க வேண்டும்.

அஹிம்சை தாயைப்போன்றது. எல்லா உயிர்களையும் பேணுவது. எல்லா அறங்களிலும் அதுவே முதன்மையானது. எல்லா உயிர்களிடத்தும் அடக்கத்துடனும்,

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


அன்புடனும் நடக்கச் செய்வது அஹிம்சை. அந்த அஹிம்சையே எல்லா நன்மைகளையும் தரும்.

ஆசை ஆகாயத்தைப் போல முடிவற்றது. அது என்றும் முழுமை அடைந்ததில்லை. ஆசையினின்று விடுபடுவதே மோட்சமாகும். பொருள் சேர்த்துக் குவித்ததின் முடிவு துயரங்கள்தான். அதுவே ஹிம்சைக்கும் பகைமைக்கும் மூல காரணமாகும். ஒவ்வொரு ஆத்மாவும் எல்லையற்ற இன்பமும் அறிவும் உடையதாக இருக்கிறது. இன்பம் என்பது புறத்திலிருந்து வருவதல்ல. அகத்தில் அமைந்ததேயாகும்.

மஹாவீரர் நெறி மனிதன் மனிதனாக வாழவும், மானுட நேயம் மலரவும் செய்யும் மாண்புடைய நெறி. அந்நெறி நம்மை உய்விக்கும் என்பதில் ஐயமில்லை.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

# கன்பூஷியஸ் சிந்தனைகள்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

# 1. கன்பூஷியஸ் சிந்தனைகள்

உலக சரித்திரத்தின் பொன்னேடுகளில் பேரொளிப் பிழம்பாக முன்னணியில் திகழும் தத்துவ ஞானி கன்பூஷியஸ். பாரத நாட்டைப் போலவே பழம்பெரும் கலாச்சாரத்தையுடைய சீன நாட்டின் பண்பாட்டை யுருவாக்கிய சிந்தனைச் சிற்பி சி. யூ. என்ற கன்பூஷியஸ். குங்-பூத்-ஸு என்ற சீன மொழிப் பெயரே லத்தீன் மொழியில் கன்பூஷியஸ் என்று வழங்கப்பட்டது. கி. மு. ஆறும் நூற்றாண்டில் சீனத்தில் வட கிழக்கு மாநிலத்தில் எழுபது வயதுடைய தந்தைக்கும், இருபது வயதுடைய தாயுக்கும் பிறந்த இத்தத்துவ மேதை அரசாங்க உயர் பதவிகளை வகித்தும், சாதாரண மக்களுடன் பழகியும் பெற்ற பேரனுபவத்துடன் தம் தத்துவத்தைப் படைத்தார்.

புலன் கடந்த அப்பாலைத் தத்துவங்களில் ஆழ்ந்து போகும் பிற தத்துவ ஞானிகளைப் போலில்லாமல், புத்தரைப் போலவும், வள்ளுவரைப் போலவும் மனித குலம் இம்மையில் எப்படி வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதைப்பற்றி மட்டும சிந்தித்து அறநெறி வழங்கிய ஆசான் கன்பூஷியஸ்,

மனிதன் வானில் பறக்கின்றான். மீனென கடலின் ஆழத்தில் நீந்துகிறான், நிலவிலும் உலவி வந்து விட்டான், விஞ்ஞானத்தால் வியத்தகு சாதனைகளை எல்லாம் படைத்துப் பெருமிதம் கொள்கிறான், இயற்கை யோடு போட்டியிடும் ஆற்றல் தனக்குண்டு என்று செருக்குறுகின்றான், இத்தனை தெரிந்தும் மனிதன தனனோடொத்த மனிதனோடு இயல்பாக, அமைதியாக

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



மகிழ்ச்சியோடு வாழக் கற்றுக்கொண்டானா? என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டிவருகிறது.

வற்றாத செல்வங்கள் இருந்தும், ஆழ்ந்தகன்ற நுண்ணிய பேரறிவு படைத்திருந்தும் ஏன் மனிதன் அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ முடியவில்லை என்பதை ஆழ்ந்து சிந்தித்த கன்பூஷியஸ், முரண்பாடுகளிடையே நடுவழிக் கொள்கையைப் போதித்து வாழ் நெறித் தத்துவத்தை வழங்குகிறார் மனிதன் மனிதனோடு உறவுகொள்வதற்கு தடையாயிருப்பது அகந்தையே என்று கண்டார். அறநெறிகளை மீறுவதற்கும், கட்டுப்பாடின்றி நடப்பதற்கும், பிற மனிதரை மதியாமல் பூசல் விளைவிப்பதற்கும் அடிப்படைக் காரணம் அகந்தைதான்.

"யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

என்று குறளாசிரியர் கூறுவது போலவே கன்பூஷியசும் அடக்கமே அறநெறிக்கு அடிப்படை என்று கூறுகிறார் பொதுவாக நாம் பிறர் நம்மைப் புரிந்துகொள்ள வேண்டும். பிறர் பாராட்ட வேண்டும் என்று கருதுகிறோம்.

கன்பூஷியஸ் கூறுகிறார்:

"மனிதர்கள் என்னைக் குறித்து புரிந்துகொள்ளவில்லையே என்று நான் வருந்தவில்லை. மனிதர்களைக் குறித்து நான் புரிந்துகொள்ளவில்லையே என்பதுதான் எனது வருத்தமெல்லாம்!

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



உலகம் தன்னைப் பாராட்டாவிடினும் யாருக்கு உலகின்பால் வெறுப்பில்லையோ அவன் மெய்யானஞானி யல்லவா?''

இப் பொன் மொழிகள் ஊன்றிச் சிந்திக்கத் தக்கவை. பணம், பதவி, அறிவு, அதிகாரம் போன்றவற்ருல் பிறரைவிடத்தான் உயர்ந்து நின்று தன்னை உலகம் பாராட்ட வேண்டும் என்ற இயல்பூக்கம் மேலோங்கி இருக்கும் காரணத்தாலே நம்மிடையே போட்டி பொருமை பூசல் போர்கள் நிகழ்வதை தனி மனிதனிடம் மட்டுமன்றி நாடுகளிடையேயும் அமைந்து உலக அமைதியைக் கெடுத்து வருவதை நாம் அறிவோம். இதற்கு ஒரே மருந்து தன்னைவிட பிறரை மதிக்கும் பாங்குதான் என்று கன்பூஷியஸ் வற்புறுத்துகிருர்.

அடக்கம் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பது முக்கியமாகும். கன்பூஷியஸ் கூறுகிருர்: ஒரு இளைஞன் தன் இல்லத்தில் இருக்கும் போது தந்தையிடம் மரியாதையுடன் இருக்கவேண்டும். வெளியே செல்லும்போது மூத்தோரிடம் மரியாதையுடன் எல்லாவற்றையும் புரிந்துகொள்ளும் திறனுடன் உண்மை யானவனுக இருக்க வேண்டும். எல்லா மனிதரிடமும் பரந்த உள்ளத்துடன் நட்பை வெளிப்படுத்தி உறவு கொள்ளவேண்டும். முடிந்தவரையில் நல்ல நூல்களைக் கற்றுத் தெளிய வேண்டும்.

எவன் தன் மனத்தை அழகின் நாட்டத்திலிருந்து மாற்றி அறத்தை நாடிச் செல்கிருனே? எவன் தாய்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



தந்தையருக்கு வஞ்சகமின்றி இயன்ற அளவு தொண்டு செய்கிருனோ? எவன் பொதுநலனுக்காக தன் உயிரையும் அர்ப்பணிக்க முன் வருவானோ? எவன் தன் நண்பர்களிடம் வஞ்சகமின்றி பேசுவானே? அவனே கற்றறிந்த இளைஞன் ஆவான். கன்பூஷியசின் கருத்தோட்டத்தில் அறநெறி என்பது மானுடநேயத்துடன் பிறரை மதித்து வாழ்வதே யாகும் இந்த அடிப்படை உண்மையை இளமையி லிருந்தே புரிந்துகொண்டு வாழ வேண்டும் என்பதே அவர் வற்புறுத்திய செய்தியாகும்.

*

## 2

ஒரு சமயம் ஒரு மாலைப் பொழுதில் எழில் மிக்க பூங்கா ஒன்றில் நான்கு சீனத்து ஞானிகள் அளவளாவிக் கொண்டிருந்தனர். மெல்லிய பூந்தென்றல் வீசவே கொடி ஒன்று அசைந்தாடியது. அதைக் கண்டு ரசித்த ஒரு ஞானி "ஆகா! இந்தப் பூங்கொடி அசைவது எவ்வளவு அழகாக இருக்கிறது" என்ருர். உடனே அடுத்தவர் "பூங்கொடியா அசைகிறது? இல்லை! இல்லை! காற்றல்லவா அசைகிறது" என்ருர். அதற்கு மூன்ருமவர் "அதுவும் இல்லை! மனம்தான் அசைகிறது!" நான்காவது ஞானியோ நிதானமாகச் சொன்ஞர். "எதுவுமே அசையவில்லை"

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



இக் கதை உலக தத்துவக் கருத்தோட்டங்களை தெளிவாக விளக்குகிறது. காட்சி, அனுமானம், ஆகமப் பிரமாணங்களில் பெறும் பொருள் முதல்வாத, கருத்து முதல்வாத கருத்தோட்டங்களில் கன்பூஷியஸ் நடுவழிக் கொள்கையினராகி, இந்த நான்கு தத்துவ ஞானியருள் இரண்டாவது வகையினராகக் காட்சி அளிக்கின்றார்.

மதச்சடங்குகளை வற்புறுத்தாமல் மானுட நேயமும் மரியாதையும், ஒழுக்கமும் வற்புறுத்திய சான்றோர் ஆகிய கன்பூஷியஸ் எளிய வாழ்க்கையையும் அளவோடு செல்வத்தைப் பெற்று, ஆடம்பரமின்றி புலன் வெறிகளுக்கு ஆட்படாமல் புலமைத் திறத்தோடு வாழும் இனிய வாழ்க்கையே வேண்டினார். அவர் அடிக்கடி சிந்தித்த விஷயங்கள் பசி, நோய், போர் இவற்றை எப்படி ஒழிப்பது என்பதுதான். இவற்றினின்றும் மனித குலம் மீள எளிய வாழ்க்கையே உயர்ந்த மருந்து என்று முடிவு செய்தார்.

தின்பதற்கு கவளச்சோறு, குடிக்க நன்னீர், படுத்துறங்க தலையணையாக முழங்கை—இப்படிப்பட்ட நிலையிலும் நான் இன்புடன் வாழ்வேன் என்று கன்பூஷியஸ் கூறுவது:

சுர மந்திர தரு மூல நிவாச:
ஸய்யா பூ தலம் அஜினம் வாச:
சர்வ பரிக்'ரஹ போ'க'த்யாக':
கஸ்ய சுகம் ந கரோதி விராக':

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



என்று சங்கரர் பற்றுகளை விடுவதிலுள்ள இன்பத்தைப் பற்றிக் கூறுவது போல உள்ளது.

கன்பூஷியஸ் கூறினார்:

தூண்டிலால் மீன் பிடிப்பேனன்றி வலையால் என்றும் மீன் பிடிக்க மாட்டேன்" என்று. சமுதாயக் குளத்தில் பேராசைகொண்டு வலை வீசி செல்வத்தைத் திரட்டி சமூகத்தையே நாற்றமடிக்கச்செய்யும் நிலையைக் கண்டித்த கன்பூஷியஸ் மகாவீரரைப் போல பரிமித பரிக்கிரகமாகிய அளவிற்கோடல் என்னும் பேரறத்தை போதிக்கின்றார். செல்வம் முயற்சியால் மட்டுமே கிட்டுவதல்ல. முயற்சியுடன் ஊழ் எனப்படும் சூழ்நிலையும் துணைபுரிய வேண்டும். கிட்டிய செல்வமும் நிலையாமை யுடையது. முயன்றால் நிச்சயம் பெற முடிகின்ற அறிவு தரும் பேரின்பம் செல்வத்தை விட உயர்வானது என்று கன்பூஷியஸ் கருதுகிறார்.

"செல்வம் நிச்சயமாகக் கிடைக்கும் பொருளா யிருந்தால் அதற்காக சவுக்கை எடுத்துக்கொண்டு குதிரை ஓட்டும் வேலையையும் செய்யத் தயார். ஆனால் அது நிச்சயமாகக் கிடைக்கும் பொருள் அல்ல. அதை விடச் சிறந்ததும் உயர்ந்ததும் இன்பந்தருவதுமான ஆன்மீக அறிவின்பங்களைத் தேடத் தொடங்கினேன்" என்று கூறினார்.

ஒரு தடவை ஆற்றோரம் நின்றுகொண்டிருந்த கன்பூஷியஸ் சீடர்களைப் பார்த்துக் கூறினார் "இந்த ஆற்றொழுக்கைப் போல எல்லாம் நிலையற்றவை.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



எல்லையற்ற பகலிரவுகளின் சுழற்சிதான் இது." என்று கூறினார்

கடலின் ஒரு துளி போன்ற இந்த மனிதன் நிலையாமையை உணராமல் மேருமலையைப் போன்ற செருக்குடன் அறநெறிகளைப் பேணாது தன்னல வெறியுடன் நெறி கெட்டுத் திரிவதைக்கண்டு மனம் நொந்த கன்பூஷியஸ்,

"ஒருபோதும் வாழ்வ தறியார் கருதுவ
கோடியும் அல்ல பல"

என வள்ளுவன் வருந்தியது போல வருந்தினார் நிலையாமையை உணர்ந்து எளிய வாழ்வோடு மனிதன் 'பண்பாடு, ஒழுக்கம், அற உணர்வு, மனமாசின்மை' ஆகியவற்றைக் கைக்கொண்டு வாழுமாறு போதித்தார்.

---

## 3

"மனச்சாட்சியை ஒட்டிய மாசற்ற ஒழுக்கம், பிறரிடம் மரியாதை— இவையே எனது உபதேசம்" என்று இரத்தினச் சுருக்கமாக வாழ்வியலைப் பற்றி போதித்த கன்பூஷியஸ் பகவான் புத்தரைப்போலவே மறுமையைப் பற்றியும், மரணத்திற்கு அப்பாலுள்ள நிலைமைகளைப் பற்றிய கற்பனைகளையும் பேசாமல் மனிதன் வாழ்வாங்கு வாழும் நெறிகளை உணர்ந்து நடப்பதே முக்கியம் என்று போதித்தார்.

ஒரு தடவை ஆனந்தன் பகவான் புத்தரிடம் "மரணத்தின் பிறகு ததாகதரின் நிலை என்ன?" என்று

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



வினவியபோது புத்தர் கூறினார். ஒரு மனிதன் அம்பு தைத்து துடிதுடித்துக்கொண்டிருக்கும்போது முதலில் நாம் செய்ய வேண்டிய கடமை அம்பை எடுத்து துன்பத்தை நீக்குவதே ஆகும். அதுவன்றி அம்பு எதனால் செய்யப்பட்டது? எந்த திசையிலிருந்து யாரால் எய்யப்பட்டது? ஏன்? என்ற ஆராய்ச்சியில் நேரம் கடத்தினால் மனித உயிர் என்ன ஆகும்? அதுபோலவே இவ்வுலகில் துன்பத்தில் கிடந்துழலும் மனிதனின் துயர் துடைப்பதே என் சிந்தனையும் பணியும் ஆகும்.

வள்ளுவனும் "மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்று வாழ்வியலை வற்புறுத்தினார். கன்பூஷியஸிடம் மரணத்தைப்பற்றி வினவியபோது "வாழ்க்கையே உனக்கு இன்னும் புரியாதபோது மரணத்தைப் புரிந்து கொள்வது எப்படி?" என்றும் வாழ்வோரிடம் உன் கடமைகளை நீ நிறைவேற்றாமல் இருக்கிறாய்! இறந்தவர்களிடம் உன் கடமைகளை எப்படி நிறைவேற்ற இயலும்? என்றும் கேட்டார். சுவர்க்க நரகங்கள், மரணத் திரைக்கு அப்பாலுள்ள மர்மங்கள், புனர்ஜென்மம், மந்திர தந்திரங்கள் இவைகளைப் பற்றி அவர் ஏதும் கூறவில்லை. மனிதனின் புலனறிவுக் கெட்டாத அந்தப் புதிர்களை எல்லாம் தெரிந்தவர் போல பாசாங்கு பண்ணும் கற்பனைச் சொல் வித்தைகளில் அவருக்கு நம்பிக்கை இல்லை. கன்பூஷியஸ் கூறினார். சீடர்களே! எனக்கேதோ ரகசியமான வித்தைகள் தெரியும் என நீங்கள் கருதுகிறீர்களா? உங்களுக்குத் தெரியாமல் ஒளித்து வைத்த ரகசிய வித்தை என்பது எதுவும்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



என்னிடம் இல்லை. உங்களுக்குத் தெரிவிக்காத எதையும் நான் செய்யமாட்டேன்."

சத்தியத்தை நேருக்கு நேர் தரிசித்த மகான்களில் ஒருவரான கன்பூஷியஸ் கூறினர்:

"பட்டினி கிடந்து பகலெல்லாம் இருந்து, இரவெல்லாம தூக்கமின்றி தியானம் செய்தேன். எனினும் யாதொரு பயனும் இல்லை. அதைவிட கற்பது நல்லது." புலன்களை ஒறுப்பதால் மட்டும் மெய்ப்பொருள் தரிசனம் கிட்டிவிட முடியாது என்ற பேருண்மையைப் புத்தரைப் போலவே கன்பூஷியசும் கூறுகிறுர்.

"மந்த்ர ஜலமு கன்ன மங்கலி ஜலமெச்சு"
என்ற வேமனுவின் குரலும் ஒத்திணைகின்றது.

அறிந்திருந்தும் அறியாதான் போல அறிதலை விரும்புவதும், கற்றிருந்தும் கல்லாதான் போல கற்க முனைவதும், செல்வம் இருந்தும் இல்லாதான் போல நடந்துகொள்வதும், நிறைகுடமாயிருந்தும் வெற்றுக் குடம்போல விளங்குவதும், தனக்கொருவர் அபகாரம் செய்திருந்தாலும் பழிவாங்க நினையாத பண்பும் சான்றோர் இயல்புகளாகும் என்று கன்பூஷியஸ் கூறுகின்றுர்

அவர் கூற்றுக்கு அவரே இலக்கணமாகத் திகழ்ந்தார் என்று காண்கின்றோம்.

"காலையில் மெய்ப்பொருள் கேட்ட ஒருவன் மாலையில் மன நிறைவோடு மரணத்தைச் சந்திக்கிறுன்" என்று அவர் கூறினர். இளமையில் வாழ்க்கையையும்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


உலகத்தையும் தெளிவாகப் புரிந்துகொண்டவன்தான் முதுமையில் மன அமைதியுடன் மரணத்தையும் மகிழ்ச்சியுடன் வரவேற்க முடியும். நம்மில் எத்தனை பேருக்கு மகிழ்ச்சியோடு வரவேற்கும் துணிவிருக்கிறது?

ஒருதடவை ஒரு குளத்தில் தேள் வீழ்ந்து விட்டது. அதைக் காப்பாற்ற முனைந்த கன்பூஷியசை தேள் கொட்டிவிட்டது. மீண்டும் நீரில் விழுந்தது. எனினும் மீண்டும் அதைக் காப்பாற்ற முனைந்தார். அதைக்கண்ட ஒருவர் தேள்தான் கொட்டுகிறதே! நீங்கள் ஏன் அதைக் காப்பாற்ற வேண்டும்? என்று கேட்டார். அதற்கு கன்பூஷியஸ் "தேளின் சுபாவம் கொட்டுவது. நான் மனிதன். என் சுபாவம் பிற உயிரைக் காப்பாற்றுவது. என்றார். அவருடைய அருள் உள்ளப்பாங்கு இதிலிருந்து புரிகிறதல்லவா?

—※—

## 4

மனிதசமுதாயத்தின் துன்பங்களுக்கு மூல காரணம் அறியாமைதானென்பதுஎல்லாதத்துவஞானிகளும்கண்ட முடிவாகும். மனிதன் அறிவைப் பெறுவதில் இடையருத நாட்டமுடையவனாக இருக்கின்றான். புலன் அனுபவத்தால் பெற்ற அறிவும், மெய்ப்பொருள் காட்சியால் பெற்ற தெளிவும் கொண்டு அதன்படி நல்லாற்றின் ஒழுகினால் தான் துன்பத்திலிருந்து விடுதலை பெறமுடியும் என்பது மகாவீரர் கண்ட மும்மணிகளான நல்லறிவு, நற்காட்சி,

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



நல்லொழுக்கமாகும். கன்பூஷியசும் அறிவும் ஒழுக்கமுமே மிகுதியும் வற்புறுத்திக் கூறுகிறார்.

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் புலன் அறிவு மனிதர்கட்கு மட்டுமன்றி விலங்குகட்கும் உரியதாகும். அதனினும் மேம்பட்டு, சென்ற இடத்தால் மனத்தைச் செல்ல விடாது, நன்றின்பாலுய்ப்பதாகிய அறிவும், எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும், எத்தன்மையதாயினும், மெய்ப்பொருள் காண்பதாகிய அறிவும், எவ்வ துறைவ துலகம் உலகத்தோ டவ்வ துறையும் அறிவும, மலர்தலும், கூம்பலும் இல்லதாகிய அறிவும் வள்ளுவன் நமக்கு வரையறுத்துக் கூறி யுள்ளான். கன்பூஷியஸ் இத்தகைய அறிவினைப் பற்றிக் கூறிவிட்டு மேலும் ஒன்று சிறப்பாகக் கூறுகிறார்.

ஒரு பொருளைப்பற்றி உனக்கு தெரிந்திருக்குமானால் தெரிந்திருக்கிறது என்றும் தெரியாது என்றால்தெரியாது என்றும் தெரிந்திருப்பதுவே உண்மையான அறிவாகும், எனபது கன்பூஷியசின் கருத்தாகும். தன்னபிக்கை யற்றவர்கள் தெரிந்திருந்தும் தமக்குத் தெரியாது என்று கருதுவதும. செருக்கு உடையோர் தெரியாதிருந்தும் தெரிந்தவர்களாக பாவித்துக் கொள்வதும் பலவேறு முரண்பாடுகட்குக் காரணமாகஇருப்பதைக் காண்கிறோம். அனுமன் தன் வலிமையைத் தான் உணர்ந்திருக்க வில்லை. சாம்பன் தூண்டியிருக்காவிட்டால் கடலைக் கடந்திருக்க மாட்டான். கதையும் மேற்கொண்டு நடக்காது. அதுபோல அபிமன்யு பாரத யுத்தத்தில் வியூகத்தைப் பிளந்து உட்செல்ல அறிவானேயன்றி

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



மீண்டு வரும் வழி தெரியாது. எனினும் தனக்கு மீண்டு வர இயலாது என்பதை அவன் அறிந்திருக்கவில்லை, அழிவுற்றான். ஆகையால் மனிதன் தனக்கு எது தெரியும்? எது தெரியாது என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அதுவே அறிவாகும். தமக்குத் தெரியாத துறைகளில் நுழைந்து சிக்கிக்கொண்டு அவதிப்படுவோரும், பேரிழப்பையுறுவோரும் அவமரியாதையுறுவோரும் ஆன பலரைக் காணும்போது கன்பூஷியசின் இக்கருத்து எவ்வளவு உயர்ந்தது என்று காணமுடிகிறது

"நீர், நெருப்புகளை விட முக்கியமானது மனிதனின் நல்லொழுக்கம்! நீரில் வீழ்ந்தோ, நெருப்பில் வீழ்ந்தோ இறந்தவர்களை நான் கண்டிருக்கிறேன். ஆனால் நல்லொழுக்கத்தால் அழிவுற்ற ஒருவனை நான் கண்டதில்லை'' என்று கன்பூஷியஸ் கூறுகிறார்.

நீரும் நெருப்பும் இன்றி நாம் வாழ முடியாது. அதுபோலவே ஒழுக்கமின்றியும் நாம் வாழ முடியாது. நீரும்நெருப்பும் சில சமயம் மனிதனுக்கு தீங்கு பயக்கும். நல்லொழுக்கம் எப்போதும் நன்மையே தரும் என்று ஒழுக்கத்தின் மேன்மையை வற்புறுத்தினர்.

இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் நல்லொழுக்கமுடையவன் அபரிமிதமான செல்வம் சேர்க்க இயலாமற் போகலாம். அமைதியும், மகிழ்ச்சியும் அளவோடமைந்த புலனின்பமும் உடைய எளிய வாழ்க்கையும் ஒழுக்கத்தாலேயே அமைகிறது. அறிஞன் இத்தகைய வாழ்க்கையைத்தான் விரும்புவான். இந்த வாழ்க்கையில் இழப்போ அழிவோ நிச்சயம் இல்லை என்று

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


தெளிவாக்கியுள்ளார் கன்பூஷியஸ். மனிதன் இன்பத்தை தேடுவது இயல்பு. இன்பம் அறத்தோடமைந்தால் அது மேன்மையானதும் நல்லதுமாகும். தீயவை பயக்கும் இன்பங்களும் உள்ளன.

"பண்பாடுடன் கூடிய நடவடிக்கையாலும், இசை, இலக்கியம் முதலியவற்ருலும் பெறும் இன்பம், பிறர் நலம் பாராட்டுவதால் பெறும் இன்பம், நட்பிஞல் பெறும் இன்பம், [illegible] மூன்றும் மேலானவையாகும். வரம்பு கடந்து புலனின்பங்களில் மூழ்கிய இன்பம் கட்டுப்பாடின்றிமனம்போனபோக்கில் திரிவதால் பெறும் இன்பம், கேளிக்கைகளிலும், வீண் பொழுதுபோக்குவதிலும் பெறும் இன்பம் இம் மூன்றும் தீயவையாகும். ஆதலின் தீய இன்பங்களைத் தவிர்த்து நல்லின்பம் நாடுவதே அறிஞர் கடன் என்று கன்பூஷியஸ் அறிவுறுத்துகிருர்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


# 5

ஒரு சமயம் கன்பூஷியஸைப் பார்த்து ஒரு உழவன் கூறினுன். பிரபஞ்சம் முழுவதும் ஒரு மகாபிரவாகமாக ஓடுகிறது. அதைத் தடுத்து மாற்ற நினைக்கும் உங்கள் முயற்சிக்கு துணையாவார் யார்? ஒருவர்பின் ஒருவராக தோற்றுவிட்ட அம்முயற்சியைப் பின்பற்றுவதை விட உலகம் போகும் போக்கில் வாழ்ந்துவிட்டுப்போவது சிறந்ததல்லவா?

இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகள் கழிந்தும் இன்றும் இதே கேள்வியை நம்மில் பெரும்பாலோர் கேட்கின்றனர். சாக்ரடீஸ், கன்பூஷியஸ், புத்தன், ஏசு. மகாவீரர், சங்கரர், வள்ளுவர், நபிகள்நாயகம் முதலிய தத்துவ தரிசிகளின் இயக்கங்கள், தன்னலம் மிக்க இந்த மனித சமுதாய மகாபிரவாகத்தைத் தடுத்து மாற்றி வெற்றிகொண்டுவிட்டன என்று கூற முடியுமா? ஏதோ ஓரளவு முன்னேறியிருக்கிறேம் என்றுதான் கூற முடியுமேயன்றி வெற்றி கண்டோம் என்று கூற முடியாது. எனினும் தோல்வியே நேரும் என்ருலும் சுத்தவீரன் போரிடத்தான் செய்வானேயன்றி சரணபுக மாட்டான். அதுபோலவே கன்பூஷியசும் தன்முயற்சியில் சிறிதும் தளராமல் பதில் கூறினுர்

நான் மனிதர்களோடு கலந்து வாழாமல் விலங்குகளுடனும், பறவைகளுடனும் வாழ முடியுமா? மனித குலம் முழுதும் நல்லாட்சி நடந்து, அதைசசீர்திருத்தும்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



பணியில் பங்குகொள்ளும் அவசியமே நேராதவரைக்கும் நான் முயன்றுகொண்டுதான் இருப்பேன்.

கன்பூஷியஸ் மானுட நேயம்மிக்க மாமேதை. மனிதனின் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் முக்கியமாக வற்புறுத்தினர். "மூன்று படைகட்கும் தளபதியைக் கூட வெற்றி கொள்ள முடியும். ஆனல் ஒரு சாதாரண மனிதனின் விருப்பத்தை சுதந்திரத்தை வெற்றி கொள்ள முடியாது." என்று கூறினர். உண்மைதான். மூவுலகையும் அடிபணியச் செய்த ராவணன், ஒரு பெண்ணின் விருப்பத்தைக் கவர முடியாமல் தோல்வியுறவில்லையா?

மனிதன் ஒன்பது விஷயங்களில் மிகுந்த கவனத்துடன், சிரத்தையுடன் விழிப்போடிருக்க வேண்டும் என்று கூறினர்

1 பார்க்கும்போது தெளிவாகப் பார்க்க வேண்டும்.

2 கேட்கும்போது தெளிவாகப்புரிந்துகொள்ளவேண்டும்

3 தனது தோற்றம் அருளோடு கூடியதாக இருக்க வேண்டும்

4 தனது நடத்தையில் மரியாதை [illegible]ங்கி இருக்க வேண்டும்.

5 தனது பேச்சில் உள்ளத் தூய்மை இருக்கவேண்டும்.

6 தனது கடமைகளைச் செய்வதில் ஈடுபாடிருக்க வேண்டும்.

7 தனக்கு சந்தேகம் ஏற்பட்டால் விஷயங்களை ஆய்ந்து தெளிவு பெற வேண்டும்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


8 தனக்கு கோபம் ஏற்பட்டால் எதிர்கால விளைவைப் பற்றிய முன் யோசனை இருக்க வேண்டும்,

9 தனக்கு லாபம் கிடைக்கும்போது அறநெறிப்படி அமைந்ததா? என்று பார்க்க வேண்டும்.

இந்த ஒன்பது சிரத்தைகளையும் மனிதன் விழிப்போடு பேண வேண்டும் என்று கூறினார்.

மனிதன் தவறுவது இயல்பே! தவறைத் தவறு என்று உணராமல் இருப்பதும், செய்த தவறைத் திருத்திக்கொள்ளாமல் இருப்பதுமே பெரிய தவறு என்பது அவர் கருத்தாகும்.

''கற்றவனுக்கு சந்தேகம் இராது. நல்லொழுக்க முடையவனுக்கு கவலை இராது. உறுதியுள்ளவனுக்கு பயம் இராது என்று கூறி, மனித குலத்தைப்பீடிக்கும் நோயான சந்தேகம், கவலை, பயம் மூன்றையும் நீக்க கல்வி, ஒழுக்கம், உறுதி என்ற மூன்றுமே மருந்து என்று கூறுகிறார்.

'எதிர்காலத்தைப்பற்றிய கணிப்பு இல்லாதவனுக்கு துன்பம் அண்மையிலேயே காத்திருக்கிறது என்று எச்சரித்து, நேற்றைய படிப்பினைகளையும், நாளைய கணிப்பையும் உணர்ந்தாலே இன்றைய வாழ்க்கை செம்மையுறும் என்று கூறினார்.

இளமையில் மரியாதை தெரிந்துகொள்ளாமல் சுற்றித்திரிவதும், வளர்ந்த பின்பிறர் பாராட்டும் எந்த ஒரு செயலும் செய்யாதிருப்பதும் முதுமை வந்து தளர்ந்த பின்பும் சாகாதிருப்பதுமாகிய இந்த மூன்றும்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



கயவரின் இயல்புகள் என்று கடிந்துரைக்கின்ருர். பிறர் பாராட்டும் ஏதாவது ஒரு நற்செயல் புரியாத வாழ்க்கை வீண் என்று எச்சரிக்கும் கன்பூஷியசின் சொற்கள் நம் நெஞ்சில் தைக்கும் சொல்லம்புகள் போல இருக்கின்றன.

—※—

## 6

உங்களுக்கு யார் எதைச் செய்தால் விரும்பமாட்டீர் களோ அதை நீங்கள் பிறருக்குச் செய்யாதீர்கள்" என்று போதித்த கன்பூஷியஸ், தனி மனிதன், குடும்பம், சமூகம் ஆகிய மூன்று நிலைகளிலும் மனிதன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை ஆழ்ந்து சிந்தித்து அறநெறிகளை வகுத்துத் தந்தார்.

தனி மனிதன் அறிவில் நாட்டமும் ஒழுக்கமும் பேணவேண்டும். குடும்ப மனிதன் அன்பில் நாட்டமும் ஒப்புரவும் பேணவேண்டும். சமூதாய மனிதன் தியாகத் தில் நாட்டமும் நீதியும் பேண வேண்டும் என்று விழைந்தார். சமுதாயப் பொறுப்புணர்ச்சி மிக்க குடி மகனுக ஒவ்வொருவரும் திகழவேண்டியும் ஆள்வோருக் கும், ஆளப்படுவோருக்கும் இடையேயான அதிகார வெறியற்ற நீதிநெறித்தொடர்புகள் நிலைபெறவேண்டியும் அவர் முயன்ருர்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



"எல்லோரிடமும் நட்புறவாட வேண்டும்" என்ற கருத்தைப்பற்றி தாங்கள் என்ன கருதுகிறீர்கள்? என்று கேட்டபோது 'அது போதாது' என்று கூறினார். எல்லோரிடமும் வெறுப்பைக் காட்டுவதைப் பற்றிக் கேட்ட போது 'அது தவறு' என்று கூறி விட்டு, கூறினார். 'நகர மக்களில் நல்லோரிடம் நட்பும், தீயோருடன் வெறுப்பும் இருப்பதே சிறந்தது. பகைவரிடமும் நீதியாக நடந்துகொள்வதும் அன்பர்களிடம் அருளோடு நடந்து கொள்வதும் சாலச் சிறந்தது என்றும் கூறுகிறார். எல்லோரையும் நேசித்தல், பிறரை மன்னித்தல் என்ற உயர்ந்த பண்புகளின் நிழலில் தீமையும், சுயமையும் வளர்ந்து விடக்கூடாது என்பதில் மிக எச்சரிக்கையாக இருந்தார் கன்பூஷியஸ். களைகளைப் பறிக்காவிட்டால் பயிர் விளையாதது போல சமுதாயத்தில் தீய பண்புகளை ஒழிக்காவிட்டால் நற்பண்புகள் மேலோங்க முடியாது. வில் பயிற்சியில் அம்பு எய்யும்போது அம்பு குறி தவறினால் அது தவறிய காரணத்தைக் கண்டுபிடிக்க முயல்வது போல நேர்மையான மனிதன் தவறு நேரும் போது அதற்கான காரணத்தைத் தன்னிடமே தேடு கிறான். சுயவனே தவற்றைப் பிறரிடம் சுமத்துவதிலும், பிறரைக் குறை காணவும் முயல்கிறான். நேர்மையான மனிதனின் பேச்சில் அடக்கம் காணப்படும். வீணாகப் பேசி நேரம் கழிக்காமல் செயலில் ஈடுபடுவான். பேச வேண்டியதை மட்டுமே பேசுவான் நடுநிலையே அவன் கடைப்பிடிக்கும் நெறியாகும் என்று கூறுகிறார்.

கன்பூஷியஸ் நேர்மையான, ஒழுக்கமுடைய மனிதனை உருவாக்குவதே சிறந்தது என்று கருதினார். முரண்பட்ட

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



கருத்துக்கள், உணர்ச்சி நிலைகளில் நடுநிலையாக நின்று நீதியும், அமைதியுமுடைய வாழ்க்கையைக் கடைப் பிடிக்குமாறு வேண்டினார்.

சீனத்து ஞானிகள் இருவர் சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தூரத்தைப் பற்றி விவாதித்தார்கள். ஒருவர் கூறினார். காலையில் பூமிக்கு அருகில் சூரியன் இருக்கிறான். மத்தியானம் தூரத்தில் போய்விடுகிறான். ஆகையால் தான காலையில் பெரிதாகக் காணப்படும் சூரியன் மத்தியானம சிறியதாகத் தென்படுகிறது. கண்காட்டும உண்மை இது" என்று வாதித்தார். அதற்கு மற்றவரோ இல்லை காலையில்தான் சூரியன் தூரத்தில் இருக்கிறான். மத்தியானம்தான் அருகில் இருக்கிறான் ஆகையால் தான் காலையில் சூரியன ஒளி சுடுவதில்லை. மத்தியானம் மிகவும் சுடுகிறது. நெருங்கியிருக்கும்போதுதானே சூடு மிகும்" என்று வாதித்தார்.

விஞ்ஞானம் தரும் விளக்கம் ஒருபுறமிருந்தாலும் இந்த சீன விஞ்ஞானிகளின் விவாதம் சுவையாகவும் இரு முரண்பட்ட கருத்திலும் ஓரளவு உண்மை யிருக்கிறது என்றும் தோன்றுவது போலவே இன்று உலகம் பொருள் முதல்வாத கருத்துவாதக் கருத்துப் போரிலும் அதன் விளைவான வாழ்க்கைப் போக்கிலும் முரண்பாடுகள் தோன்றுகின்றன. சமனபடுத்தி நடுநிலை நெறியில் செல்வதே சாலச்சிறந்த நெறியாகும் புத்தர், மகாவீரர், வள்ளுவர் போன்றோரைப் போலவே கன்பூஷியசும் நடுநிலை நெறியை வற்புறுத்தியுள்ளார்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



கன்பூஷியஸ், அன்பின் மூலம் அகந்தையும், தன்னலமும் படிப்படியாகக் குறைகிறது என்றும், தானும் சமுதாயமும் ஒருங்கிணைந்து அமைதியுடன் வாழ்வதற்கு கடமை உணர்வும் கட்டுப்பாடும் இன்றியமையாதவை என்றும் விளக்கியுள்ளார். தந்தை—மகன், கணவன்—மனைவி, மூத்தோர்—இளையோர், ஆள்வோர்—குடிமகன், நண்பர் ஆகிய ஐந்து உறவு நிலைகள் சமுதாயத்தில் அமைந்துள்ளன என்றும் இவ்வுறவுகள் கடமை உணர்வுடனும், அன்போடும், ஒழுக்கத்தோடும் சீராக அமைய வேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

கன்பூஷியஸ் வாழ்ந்த காலத்திலிருந்தே மற்றொரு சீனஞானி லாஓ-ட்ஸே தனி மனித சுதந்திரத்தை வற்புறுத்தியபோது கன்பூஷியஸ் சமுதாயக்கடன்களையே வற்புறுத்தினார். லா-ஓட்-ஸே கூறினார்.

ஒரு வீட்டின் மதிப்புடைய பொருள் (சாரமான வஸ்து) அவ்வீட்டின் சுவர்களோ, ஜன்னல்களோ, கதவுகளோ அல்ல. சுவர்களுக்கு இடைப்பட்ட வெற்றிடமே (காலி இடமே) சாரமான வஸ்து ஆகும். அந்த வெற்றிடமில்லாவிட்டால் சுவர், ஜன்னல்களால் என்ன பயன்! ஒரு குடத்தின் சாரமான மதிப்பு அக்குடத்தின் தங்கம் மண் ஆகிய பொருட்களால் அன்று. அக்குடத்தின் வெற்றிடமே சாரமாகும்.

இக்கூற்று புறப்பொருள்சார்ந்த உலகின் மதிப்பை விட தனிமனித அகத்தின் சாரமே மதிப்புடையது என்று விளக்குகிறது. எனினும், தனி மனிதன் சமுதாயத்தோடு

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



இயைந்து இயங்காவிட்டால் வாழ முடியாது. சமுதாய இணக்கம் அறநெறிக் கடமைகள் ஆற்றுவதாலும், அன்பினாலுமே ஏற்பட முடியும். ஆதலினால் சமுதாய ஒழுக்கமே முக்கியத்துவமுடையது என்பது கன்பூஷியசின் போதனையாகும்.

லா-ஓ-ட்ஸேயின் லா-ஓ என்னும் மதம் மனிதனின் அகநிலைப் பண்பையும், தன்னை மையமாக வைத்து உலக இயக்கத்தைப் பார்க்கும் வேதாந்த மனோபாவத்தை வளர்த்த சீன நாட்டில், உலகை மையமாக பிரதானப் படுத்தி தன்னை அதில் ஓரங்கமாகக் காணும் புறநிலை மெய்மைப் பண்பை வலியுறுத்திய கன்பூஷியஸ் மதம், புதுநெறி காட்டியது. இந்திய நாட்டிலிருந்து சென்ற புத்த மதமும் சீனப் பண்பாட்டை உருவாக்கியது.

உலகப்பெருஞ்சிந்தனையாளரும்; சீனப்பண்பாட்டை உருவாக்கியவருமான கன்பூஷியசின் நெறி உலகப் பொதுமை வாய்ந்த நெறியாகும். அந்நெறி நம்மை வழிப்படுத்தும் ஒளிவிளக்காக திகழ்கின்றது

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

# டால்ஸ்டாய் சிந்தனைகள்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


# டால்ஸ்டாயின் சிந்தனைகள்

## 1. வாழ்வு, மதம்

உலகின் மாபெரும் சிந்தனையாளரும் எழுத்தாளருமாகிய ருஷ்ய ஞானி லியோ டால்ஸ்டாய் பாரதத் தந்தை மகாத்மா காந்தியடிகளால் எனது குருநாதர்' என்று போற்றிப் பாராட்டப்பட்டவர். அவரது நூற்றைம்பதாவது பிறந்த நாள் விழா இவ்வாண்டு உலகம் முழுதும் கொண்டாடப்பெறுகின்றது. அவரது சிந்தனைகளும், கலைப் படைப்புகளும் என்றும் நிலைத்த அமரத் தன்மை வாய்ந்தவையாகும்.

மனித வாழ்வின் லட்சியம் என்ன? என்பது குறித்து அவர் ஆழ்ந்து சிந்தித்தார். இறைவனடி நீழலில் இணைந்திருப்பதே வாழ்வின் லட்சியம் என்று கருதுவோர் பலருண்டு. மண்ணுலக வாழ்வின் இன்பங்களை ஆரத் துய்ப்பதே வாழ்வின் லட்சியம் என்று கருதுவோரும் பலருண்டு. மண்ணில் ஆழவேரூன்றி வானேக்கி படரும் மரம் போல இவ்வுலக வாழ்வை நேசித்து வானக இன்பங்களை யாசிக்கின்றபாங்கை வாழ்வின் லட்சியமாகக் கருதுவோரும் உண்டு. ஆனல் டால்ஸ்டாய் "மனித வாழ்வின் லட்சியம் என்ன? உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் ஒன்றுபட்டு அபிவிருத்தியடைவதற்கு உறுதுணை அளிப்பதேயாகும் என்று கூறுகிருர்.

சமுதாயம் முழுதும் ஒத்திணைந்தமுறையில் வளர்ச்சி பெறவேண்டும். சமுதாயத்தின் ஒவ்வோரங்கமும் அதற்கு

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



உதவிசெய்யவேண்டும். அவ்வாறன்றி ஒவ்வோருறுப்பும் தத்தம் போக்கில் வளர்வதும் தேய்வதுமாக இருந்தால் முரண்பாடுகளினாலேயே அது லட்சியத்தை அடைய முடியாமல் அவலமுற நேரும் ஒரு உடம்பின் வெளியுறுப்புக்களும், உள்ளுறுப்புக்களும், மனமும் ஆரோக்கியமாக அமைவதற்கு சமசீரான வளர்ச்சி அவசியமாகும். உடம்பில் ஏதோ ஒரு உறுப்புக்கு மட்டும் ரத்தநாளங்கள் மூலம் அதிக ரத்தம் பாய்ச்சப்பட்டு, மற்ற உறுப்புக்களின் வளர்ச்சி குன்றினால் அவ்வுடல் நோய்வாய்ப்பட்டு அழியும். அதுபோன்றே சமுதாயத்திலும் ஒவ்வொரு மனிதனும் அவனது முழு ஆற்றலும் பயன்படுத்தும்வகையில் வளர்ச்சியுறவேண்டும், வறுமை அறியாமை, நோய் போன்றவற்றிற்கு ஆட்பட்டு அவனது வளர்ச்சி குன்றுமேயானால் சமுதாயம் முரண்பட்டு சிக்கல்களினால் நலிவுறும். ஆதலின் சமுதாய முழுவளர்ச்சிக்கும் இயைந்த ஒவ்வொரு தனி மனிதனுடைய லட்சியமும் அமைய வேண்டும். இந்த லட்சியத்தை அடைவதைத் தான் கலைகளும், தத்துவ் ஞானங்களும், மதங்களும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

எப்படி வயலில் நெல்லோடு புல்லும் வளர்ந்து விடுகிறதோ அது போன்றே சமுதாயத்தில் உண்மைபோடு கலந்து போலிகளும் உருவாகி வளர்ந்து வருகின்றன. போலிகளைக் களைந்து சத்தியத்தை நிலை நிறுத்துவதே உண்மையான மதமாகும் என்று டால்ஸ்டாய் கருதினார். குளத்தில் பாசி படர்ந்து தூய நன்னீரை மறைத்து விடுவது போல தத்துவஞானச் செழுமையுடைய

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



மதத்தில் வெற்றுச் சடங்குகளும், புரோகிதமும், போலித் துறவுகளும் மேலோங்கியிருப்பதைக் கண்டு டால்ஸ்டாய் மனங் குமுறினர்.

மனிதனின் மனச்சாட்சிக்கு ஏற்றவைதான் இறைவனுல் அருளப்பட்ட சத்திய நெறிகள். மற்றவை எல்லாம் மனித மூளையின் கற்பனைச்சித்திரங்கள் என்றும் இவையே மனிதரிடையே விரோதமும், வெறுப்பும் முரண்பாடும் விளைவிக்கின்றன என்றும் கூறினர், எந்த ஒரு கருத்தை அறத்தை எல்லா மதங்களும் வற்புறுத்துகின்றனவோ அதுவே உண்மையான மதம் என்றும் வாழ்வின் லட்சியம் என்றும் அவற்றுக்குள் முரண்படுபவை எல்லாம் உண்மையல்ல, போலிகள் என்றும் தெளிவுறுத்தினர்.

உதாரணமாக, அன்பு, அறம், பிறருக்குஊதல் அடக்கம் இறைநம்பிக்கை ஆன்மாவில் நம்பிக்கை. எளியவாழ்க்கை. அஹிம்சை போன்ற பேரறங்களில் எல்லாமதங்கட்கும் உடன்பாடாதலின் இக்கருத்துக்களே உண்மையானமதமாகும், காசியாத்திரை. இரவுண்ணுதிருக்கவேண்டும். பாவ மன்னிப்புச்சீட்டுவழங்கல். மதச் சின்னங்கள் தரித்தல்போன்றவையெல்லாம் எல்லாமதங்களும் ஒப்புக்கொள்வதில்லை. ஆகையால் இத்தகைய சிறப்புவிதிகளை. மதம்என்று கருதுவதுகூடாது எல்லா மதங்களும் ஏற்கும் பொதுவிதிகளே சத்தியநெறிகளாகும். அதுவே உண்மையான மதம். அதையே நாம் பின்பற்ற வேண்டுமன்றி போலியான சடங்குகளை அல்ல என்று ஆணித்தரமாக வலியுறுத்திக் கூறினர்:

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


## 2. எளிமை, கடமை

இன்றைய மனித சமுதாயத்தின் பல்வேறு பட்ட துன்பதுயரங்களுக்கும், ஏற்றத்தாழ்வுகளுக்கும் மூல காரணம் மனிதர்களின் ஆடம்பர மோகமும் போலி கௌரவமும் ஆகும் என்ற டால்ஸ்டாய் இதற்கு ஒரே மருந்து எளியவாழ்க்கைதான் என்று கூறினர்.

தீர யோசிக்கும் வேளையில் உண்பதும் உறங்குவதுமாய் முடியும். இந்த வாழ்வில் ஆசைக்கோரளவில்லை; பிறரைவிடத்தான் மேம்பட்டு நிற்க வேண்டும் என்ற உணர்வூக்கத்தின் காரணமாக, மனச்சாட்சியின் படி வாழும் அறநெறியில் நின்று மேம்பட்டு வாழ்வது சிரமமானது என்றுகருதி வெளிவேடத்தின் மூலமாக உடையிலும் உண்டியிலும், தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதின் மூலமும் ஆடம்பரமாகக் காட்சியளித்து தான் பிறரினும் மேம்பட்டவன் என்று காட்டிக்கொள்ள முயல்கின்ருன். அதன் காரணமாக ஆடம்பரத் தேவைகளை அதிகப்படுத்தி, அதிகப்படுத்தி, அத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பணத்தைத் தேடுவதுவே தன் வாழ்வின் லட்சியமாகக்கொண்டு அல்லலுறுகின்ருன். அத்திப்பழம் மேலுக்கு மினு மினுப்பாக இருந்தாலும் உள்ளே புழுத்துப்போய் அழிவதுபோல வெளித்தோற்றத்தில் புலனின்பத் தேட்டத்தில் வானுயர் தோற்றம் கொண்டிருந்தாலும் அவர்கள் உள்ளமோ சதா கவலையும் பரபரப்பும். அமைதியின்மையுமுடையதாக துன்பத்திலேயே துவளுகின்றது. தமது புலனின்பங்களைத்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



தேடலில் பிறர் நலத்தை மறந்து தன்னல வெறி மிகுந்து இயங்கும் காரணத்தால் அவர்களுடைய மனச்சாட்சியே அறநெறி பிறழும் போதெல்லாம் அவர்களுடைய இதயத்தைக் குத்திக் கிளறி புண்படுத்துகின்றது.

அறநெறி சார்ந்த எளிய வாழ்வில் பெறும் ஆனந்தத்தை அடைய முடியாமல் ஆடம்பர மோகத்தால் அலைந்து திரிந்து அமைதியற்ற மனிதனின் இதயத்தை மனச்சாட்சி புண்படுத்துகிறது. இந்த மனச்சாட்சியைக் கொல்வதற்குரிய ஒரு மார்க்கமாகவே மனிதன் போதைப் பொருள்களை, லாகிரி வஸ்துக்களைப் பயன்படுத்துகிறான் என்று டால்ஸ்டாய் ஆழ்ந்த ஆராய்ச்சியின் மூலம் அறிந்து தெளிவுபடுத்தினார், கொலை முதலிய தீயசெயல்களைச் செய்தவர்கள் தம் மனச்சாட்சியை மறக்கடித்து விடவே மது, சிகரெட் முதலியவற்றை உபயோகிக்கிறார்கள் என்று கண்டார். மனச்சாட்சியை இழந்து விட்டால் மனித சமுதாயம் அறநெறியில் இயங்குவது அரிதாகையால் டால்ஸ்டாய் மது, லாகிரி வஸ்துக்களைப் பயன்படுத்துவதை அறவே நீக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

ஒவ்வொரு மனிதனும் தனது கடமைகளை சமுதாயப் பொறுப்புணர்வோடு நிறைவேற்றுவிட்டால் வளர்ச்சி தடைபடும் என்றும், பிறரை எதிர்பாராது தான் உண்மையென்று கண்ட வழியில் துணிந்து பயணம் செய்ய வேண்டும் என்றும் டால்ஸ்டாய்கூறினார். "பிறர்பார்த்துக்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



கொள்வார்கள்'' நமக்கென்ன'' என்று தான் தப்பித்துக் கொள்ளும் மனப்பாங்கை அவர் கண்டித்தார்.

ஒரு மன்னனுடைய திருமண நாளில் குடிமக்கள் அனைவருமே குறிப்பிட்ட அளவு பாலைக்கொண்டுவந்து ஒரு பாத்திரத்தில் ஊற்றுமாறு கேட்டுக்கொண்டார்கள். அன்று பாத்திரத்தில் பார்த்தால் நீர் மட்டுமே இருந்தது. பாலைக் காணோம். ஒவ்வொருவரும் பிறர் பாலை யூற்று வார்கள். தான் மட்டும் நீரை ஊற்றினால் கண்டு கொள்ளவாபோகிறார்கள்? என்று நினைத்ததன் பயனாக பால் இன்றி நீரே மிஞ்சியது. அது போன்றே சமுதாயத் தில் அனைவருமே தமது பொறுப்பையுணராது, தம் கடமைகளில் இருந்து தப்பித்துக்கொள்ளப் பார்த்தால் அதன் விளைவாக சமுதாய லட்சியத்தை அடைய முடியாது.

மனிதனுக்கு வேண்டுவது உண்ண உணவும் உடுக்க உடையும், இருக்க இடமும் என்று இருப்பவனுக்கு உள்ளம் அமைதியாகவும், மகிழ்ச்சியோடும் இருக்கும். சொத்துத் தேடுபவன் உள்ளமோ குழப்பங்கள் நிறைந்து, திருப்தியற்று, அமைதியிழந்து காணப்படும் என்று டால்ஸ்டாய் கூறினார்.

நாம் எவ்வளவு பணக்காரர்களாக இருந்தாலும் விஞ்ஞானத்தாலும், கலைகளாலும் வாழ்க்கையை இன் புறுத்திக்கொள்ள முயன்றாலும் நாள்தோறும் நாம் பலவீனர்களாகவும், ஆரோக்கியம் அற்றவர்களாகவும் குன்றி வருகிறோம், வாழ்க்கைத் துயர்கள் மலிகின்றன.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



ஏனென்றால் நமது வாழ்க்கை மனச்சாட்சிக்கு நேர் விரோதமாக இருக்கிறது. ஆகையால் ஊக்கத்துடன் உண்மையைத் தேட வேண்டும், அதனபடி நடக்க வேண்டும். உலகமனைத்தும் நம்மை எதிர்த்தாலும் புத்தியும், மனச்சாட்சியும் தெளிவாய் உபதேசிப்பவை களை மீறக் கூடாது. உண்மையைக் கடைப்பிடித் தொழுகுவதால் மலைபோன்ற இன்னல்கள், இடையூறுகள் எதிர்ப்பட்டாலும் அஞ்சக் கூடாது. உண்மையைத் தைரியத்துடன் பார்க்க அஞ்சி கண்ணை மூடிக்கொள்ளக் கூடாது.

மனச்சாட்சி கற்பிக்கும் உண்மையின் வழியே வாழ முற்படும்போதுதான் மனத்தில் தைரியமும் இன்பமும் நிலை பெறுகின்றன

"வானுயர் தோற்றம் எவன் செய்யும் தன்னெஞ்சே
தானறி குற்றப் படின்"

என்ற வள்ளுவர் வாக்கும் இங்கே நினைவு கூரத்தக்க தாகும். டால்ஸ்டாயும், "மனத்துக்கண் மாசிலன் ஆதலே அறன்" என்று தெளிவுறுத்துகிறார்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



## 3. உழைப்பு

மனித வாழ்க்கைக்கு அடிப்படையாயிருப்பது உழைப்பு. 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?' என்று பாரதி கூறுவது போல உழைப்பின்றி உலகம் இயங்காது ஆகையால் சமுதாயத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் உழைப்பது ஜீவாதாரமான கடமையாகும் என்பதை டால்ஸ்டாய் தெளிவுபடுத்தினர்.

வலையும் தூண்டிலும் இல்லாதவனை செம்படவன் என்று கூற முடியுமா? அதுபோல நிலமும் கருவிகளும் இல்லாதவனை உழைப்பவன் என்று கூற முடியாது. ஆனால் உழைப்பவனுக்குரிய நிலமும் கருவியும் வேறொருவர் உடைமையாய் இருக்கிறது. உழைப்பவன் வெறும் கையும் காலும் மட்டுமே மிச்சமாகஇருக்கிற நிலை ஏற்பட்டுவிட்டது. இது அநீதியாகும் என்று டால்ஸ்டாய் கூறுகிறார்.

மனிதருட் சிலர் தாம் உழைக்காமல் பிறர் உழைப்பில் வாழ்வதாலேயே அடிமை முறைகளும், பணமும் சொத்து சேர்த்தலும் உருவானதென்றும், இம் முறையை அமலாக்க அரசாங்க பலமும், சட்டமும் மத போதனைகளும் உதவுகின்றன என்றும் கூறிய டால்ஸ்டாய் இந்த அமைப்பின் விளைவாக சமுதாயத்தில் வறியவர்கள் உண்ண உணவின்றி வாடி வதங்க நேருகிறதென்று கூறினர். நமது தேவைகளைச் சுருக்கிக் கொள்ள வேண்டும், நம் வேலையை நாமே செய்யத் தொடங்க

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



வேண்டும். அப்போதுதான் நாம் பிறருக்கு உதவ முடியும். அறநெறியில் வாழ முடியும்.

கரத்தால் உழைப்பதும், கருத்தால் உழைப்பதும் ஆன இரண்டு பிரிவினரும் பரஸ்பரம் உதவும் வகையில் இருக்க வேண்டும் என்றும், கரத்தால் உழைப்பவருக்கு பயன்படாத, கலையின் பெயரில் ஆடம்பரங்களில் திளைத்து வாழ உதவும் கருத்து உழைப்பவர்களை அவர் கண்டித்தார். மூளை உழைப்பாளர்கள் கூட சிறிதளவு உடலுழைப்பு செய்தல் வேண்டும் என்று வற்புறுத்தினார். அப்போது தான் நமது உடலும், உள்ளமும் ஆரோக்கியமாக இருக்கும். சமூகத்திலும் உழைப்பின் பெருமை உணரப் படுவதோடு பிறரைச் சுரண்டும் வழக்கமும் மாயும் என்று கூறினார் ஒவ்வொரு மனிதனும் தினந்தோறும் முதலில் வியர்வை உண்டாகும் கடினமான உழைப்பு செய்ய வேண்டும். இரண்டாவதாக மென்மையான விரல்களால் செய்யப்படும் வேலைகள் செய்ய வேண்டும், மூன்றாவதாக மூளையால் செய்யவேண்டிய படித்தல், எழுதுதல் போன்ற வற்றைச் செய்ய வேண்டும். நான்காவதாக உற்றார் உறவினர்களுடன் கலந்து அளவளாவி நட்பும் சமூக உறவும் வளர்த்து மகிழ்தல் வேண்டும்.

இந்த நான்கும் ஒவ்வொருவரும் கடைப்பிடித்தால் அன்றி சமூகம் வளர்ச்சியும் அமைதியும் பெற முடியாது. ஒரு செடி வளர நிலம், நீர், வெயில், காற்று என்னும் நான்குமே வேண்டியுள்ளது, இவற்றில் ஒன்றில்லா விட்டாலும் அதன் வளர்ச்சி குன்றி விடும். அது

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



போன்றே. ஒவ்வொரு மனிதருக்கும் இந்த நான்குமே அமைய வேண்டும். டால்ஸ்டாய் நமது சமுதாயத் தீமைகளைக் கண்டு மனம் குமுறி இத் தீமைகளைக் களைய 'இனி நாம் செய்யவேண்டியது யாது?' என்று சிந்தித்து தீர்மானமாக மூன்று சூத்திரங்களை வழங்கினார்.

முதலாவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது நமது மனச்சாட்சி தருமம் என்று காண்பிக்கும் மார்க்கத்திலிருந்து நாம் எவ்வளவு விலகியிருந்தாலும் அதை உணர்ந்ததும் உண்மையைக் கண்டு பிரமித்து பயந்து விடாமல் துணிவுடன் திரும்பி புதிய அறநெறியில் செல்ல வேண்டும்.

இரண்டாவது நான் தருமவான் என்னும் எண்ணத்தையும, மற்றவர்களை விட மேலானவன், சிறந்தவன் என்னும் எண்ணங்களையும் அறவே ஒழித்தல் வேண்டும். அத்தகைய செருக்கு இருந்தால் அதை தாழ்மையுடன் ஒப்புக்கொண்டு அடக்கத்துடன் வாழ முற்பட வேண்டும.

மூன்றாவது எனது உயிரையும், பிறர் உயிரையும் காப்பாற்றுவதற்கு இன்றியமையாததும் சாசுவதமானதுமான உழைப்பு நியமத்தைப் பின்பற்றி வாழ வேண்டும.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் மனித சமுதாயத்தின் மூன்று லட்சியங்களையடைவதற்கு இந்த மூன்று சூத்திரங்களைப் பின்பற்றுவதே நம் கடமையாகும்.

*

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



## 4. சொத்து, பெண்கள்

**சொத்துத்தான்** எல்லாக் கொடுமைகளுக்கும், தீமைகளுக்கும் மூல காரணம். இவ்வாறிருந்தும் நமது சமூகத்தின் முழு முயற்சியும் அதைச் சேகரிப்பதிலேயே செலவாகிறது. தனி மனிதர்களும், அரசாங்கங்களும் இதனாலேயே போரிடுகின்றன, மனிதர்கள் கஷ்டப்படுவதுடன் ஏமாற்றுவதும், கொடுமை புரிவதும் இந்த சொத்துக்காகத்தான். நீதிமன்றங்கள், போலீஸ், சிறை தண்டனைகள், எல்லாம் சொத்தைப் பாதுகாக்கவே ஏற்பட்டன. ஆகவே சொத்து என்பது என்ன? சொத்து உண்மையாகவே மனிதனுக்கு உரியது என்று எண்ணுவது இயல்பாகிவிட்டது. சொந்தமாக இருப்பது எதுவோ அதுவே சொத்து எனப்படும். அப்படிப்பார்த்தால் தனது உடலைத் தவிர வேறெதையும் தன்னுடையது என்று உரிமை பாராட்டுவது தவறு. பிறவற்றை உரிமை பாராட்டுவதால் ஆசாபங்கமும், அமைதியின்மையும் அடைகின்றான் இந்த குருட்டு நம்பிக்கை ஒழிய வேண்டும். இன்றேல் தானும் வருந்தி, பிறரையும் வருத்த நேரும் என்று டால்ஸ்டாய் கூறுகிறார்.

எனது உணர்ச்சியுடன் சம்பந்தப்பட்டதும், என் மனப்படி நடக்கக் கூடியதும் உடல் ஒன்றுதான். ஆகையால் அதுவே என் உண்மையான சொத்து" என்று டால்ஸ்டாய் விளக்கினார்.

மனைவி, மக்கள், வீடு, நில புலன்கள் எல்லாம்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


தன் உடமையென்றும் தன் ஆணைக்கு கட்டுப்பட்டவை என்றும் நினைப்பவன், அவற்றின் மூலம் தான உழைக்காமல், வேலைகள் ஏவி சுகமாக வாழ நினைப்பவன் நிச்சயமாக மன வருத்தமும் ஆரோக்கியமற்ற நிலையும் அடைந்து அவலமுறுவான. தனனைத்தவிர தன் புறத்தே உள்ள எந்தப் பொருளும் அதனதன் சுபாவத்திற்கேற்ப இயங்குமேயன்றி நம் விருப்பத்திற்கேற்ப அமைய வேண்டும் என்று எதிர்பார்ப்பதோ வற்புறுத்துவதோ நியாயமல்ல.

வாழ்க்கையின் நோக்கம் உழைப்பேயன்றி சொத்துச் சேர்ப்பதல்ல. இதையுணர்ந்தவன் வேலை செய்யுங் கருவிகளைப்பற்றிக் கூட கவலைப்பட மாட்டான். யந்திரக் கலப்பைஇருநதால் அதைக்கொண்டு உழுவான். அதில்லாவிட்டால் சாதாரணமாக மாடு பூட்டி ஏர் உழுவான். அதுவும இல்லாவட்டால் மண்வெட்டிகொண்டு கொத்துவான. எப்படியும் தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வான். மனிதர்சட்கு உபயோகமாகும் உழைப்பில் மகிழ்ச்சியடைவான் எனறு உழைப்பின் மேன்மையை டால்ஸ்டாய் கூறுகிறார்.

ஆண்களுக்கு உழைப்பும், பெண்களுக்கு சந்ததிகளை வளர்த்து குடுபப நிர்வாகம் செய்வதும் சமூக நியதிகளாகும் பித்தப்பை உடமபில் எப்படி இடம் மாறுகதோ அதேபோல இந்த ஏற்பாடும மாறக் கூடாதது இதை மீறினல் சமுதாயம் நசிந்துவிடும் என்று டால்ஸ்டாய் எச்சரிக்கிறார்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



பெண்கள் ஆண்களுக்குரிய கடின உழைப்பு வேலைகளில் பொருள் சேர்க்கும் ஆவலோ, சுகபோக வாழ்வின் விருப்பத்தாலோ, சமத்துவம் என்ற போலி எண்ணத்தாலோ புகுதல் கூடாது என்று கூறுகிறார்.

சமுதாயத்தின் பண்பாடு, அறவுணர்வு, ஒழுக்கம், கற்பு முதலிய மேன்மையான நன்னெறிகளை பெண்கள் தான் காப்பாற்ற முடியும் என்று டால்ஸ்டாய் கூறுகிறார் கருவுறும் நாள்முதல பிரசவ வேதனையடைந்து குழந்தை களைப் பெற்றும், பராமரித்தும். சமையல் வேலையில் ஈடுபட்டும் பெண், சமூகத்தில் கடமையை ஆற்று கின்றாள். பிறர் பாராட்டோ, புகழ்ச்சியோ விரும்பாமல் கடமையுணர்வோடு சிரமப்படும பெண்களை ஆண்கள் தாய்மையின் மகத்துவத்தையுணர்ந்து மதித்தல் வேண் டும வாழ்க்கைத் துணைவிகளாக மதிக்க வேண்டுமே யன்றி, தனக்கு சமபளம இன்றிக் கிடைத்த வேலைக் காரியாக, அடிமைமனப்பான்மையில் காணும கொடுமை நீங்க வேண்டும என்று டால்ஸ்டாய் கூறுகிறார்.

ஆடம்பரமான பகட்டுடைகள் அணிந்துகொண்டு ஆண்களுக்கு கவர்ச்சியூட்டுவதும, தான பெற்ற குழந்தை களுக்குப் பாலூட்டுவதைசகூடப் பெரும் தொல்லையாகக் கருதி தாதிகளிடம விட்டுவிட்டுப்போகும் பெண்களையும நவநாகரிகப் போலி ஆடம்பரத்தில் மூழ்கியுள்ள பெண் களையும் டால்ஸ்டாய் கண்டித்து, பெண்கள் தங்கள் பெருமையையும். கண்ணியத்தையும், சக்தியையும் உணர்ந்து நமது பண்பாட்டைக் காக்க வேண்டிய

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



பொறுப்பு அவர்கள் கையில்தான் இருக்கிறது என்று கூறுகிருர். டால்ஸ்டாய் விடுக்கும் அறைகூவலைக் கேட்போம்.

மனிதர்களே! இவ்வுலகத்தில் மாந்தர் உயிர் பிழைக்க வேண்டுமாயின், தீய பழக்கங்களிலிருந்து உய்ய வேண்டுமாஞல் அது உங்கள் கையில்தான் இருக்கிறது கடவுளின் ஆணையைப் பணிவுடனும், பொறுமையுடனும் நிறைவேற்றுபவர்கள் நீங்களே.

---

5

மனிதன் உணர்வு மயமானவன். அவன் இதயம் சிலசமயம் பூப்போல சுடு சொல் கேட்டதுமே வாடிவிடுகிறது. சில சமயம் கல் போல வன்மையுற்று எதையும் எதிர்த்து நிற்கும் வலிமை பெற்றுவிடுகிறது. இத்தகைய இதயத்தைப் பெற்ற மனிதன் உணர்வின் எல்லையிலேயே தேய்ந்து விடாமல் அறிவின் பரப்பில் தனது செயற்பாடுகளை அமைத்துக் கொள்ளவேண்டும். அறிவுக்கும், உணர்வுக்கும், மூளைக்கும், இதயத்துக்கும் ஏற்படும் மோதலில் மனச்சாட்சிகாட்டும் நன்னெறியை கடைப்பிடித்தொழுக வேண்டும். அத்தகைய மனச்சாட்சியை கலையும் இலக்கியமும் உருவாக்கித் தர வேண்டும். அப்போதுதான் சமுதாயம் முழு வளர்ச்சி பெறத் துணை புரியும்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



உணர்வு மயமான மனிதன் வருத்தமடைவதும் கோபமடைவதும் இயல்பே. ஆனால் அந்த வருத்தத்தைக் கவலையாகவும், கோபத்தைத் துவேஷமாகவும் மாற்றி மனிதர்கள் துயருறுகின்றனர். குழந்தைகள் சில சமயம சண்டையிடும். கோபமும் வருத்தமும் அடையும் ஆனால் அதற்குரிய காரணங்கள் நீங்கியதுமே அக் குழந்தைகள் மீண்டும் ஒன்று கூடி விளையாடும். அதே குழந்தைகளின் காரணமாகச் சண்டை போட்டுக் கொண்டே பெற்றோர்களோ கவலையும், துவேஷமும் உடையவர்களாக நெடுங் காலமாக பிரிந்துவிடுவார்கள், குழந்தையுள்ளமும், ஆசாபாசமுடைய மனித உள்ளமும் எத்துணை வேறுபடுகின்றன என்பதை டால்ஸ்டாய் பல கதைகள் மூலம் விளக்கினார்.

இந்த வாழ்க்கையை நேசிக்காமல், இதிலிருந்து தப்பித்துக்கொள்ள முயலும் துறவி, மனித சஞ்சாரம் அற்ற மலைகளில வாழ்ந்தாலும், தன்னை நாடி வலிய வந்த சிற்றின்பங்களைத் துறந்து, பற்றற்று இருந்தாலும் கூட, முடிவில் தான் கற்பித்த லட்சியங்களில் தோல்வி யுற்று, இந்த வாழ்வினை நேசிக்கவும் தன்னை நேசிக்கும் அன்பு இதயத்தை நாடி மீண்டும் மனிதருடன் கூடி வாழ நேரும் என்பதையும் அவர் கதை மூலம் விளக்கு கிறார். மனித வாழ்வின் சாரம் சகமனிதர்களுடன் அன்பு டன கூடி வாழ்வதிலும் இயற்கையோடிணைந்த எளிய இன்ப வாழ்விலுமே அமைந்திருப்பதை டால்ஸ்டாய் விளக்குகின்றார்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)


நீர் வீழ்ச்சிகளைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்து வியத்தகு விஞ்ஞான அற்புதங்களை விளைவிக்கிறோம். மலைகளைக் குடைந்து ரயில்பாதைகளை அமைத்துள்ளோம். வானில் உலவி நிலவையே தொட முயல்கின்றோம். இத்தகைய விஞ்ஞானத்தைப்பற்றி பெருமையும் மிகுந்த மகிழ்ச்சியும் அடைகின்றோம ஆனால் அதே சமயம மலைகளைக் குடைவதற்காக உபயோகிக்கின்ற அதே வெடிமருந்தை யுத்தங்களில் மனிதனை மனிதன் அழிக்க வேண்டி உபயோகிக்கிறோம் யுத்தம தவிர்க்க முடியாததென்று கருதி இடைவிடாது ஆயத்தம் செய்கிறோம் மின்சாரத்தின சக்தியை எல்லோருக்கும இன்றியமையாத அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றப் பயன்படுத்தாமல் ஆடம்பரப்பொருள்களை தயாரித்துக் குவிப்பதில் ஈடுபடுத்துகிறோம். இதன் காரணமாக ஏழ்மை. வறுமை. துயர்கள் நம் சமுதாயத்தை இன்னும பீடித்து வருகின்றன, இந்நிலையை மாற்ற அறிவியல் (விஞ்ஞானம) வேறும்விஷய ஞானத்தை ஆராய்வதில் ஈடுபடாமல் மனிதனுக்கு மனிதன் கூட்டுறவு வாழ்க்கை எப்படி அமையவேண்டும. ஆண் பெண உறவுகள் எப்படி பாவிக்க வேண்டும். குழந்தைகளுக்கு எப்படி கல்வி புகட்டுவது நிலத்தை எப்படி உபயோகித்து அதிக விளைச்சல் பெறுவது, மற்றவர்களை ஒடுக்காமல் எப்படி சாகுபடி செய்வது, அன்னியர்களை எப்படி நடத்துவது, விலங்குகளிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் மனிதவாழ்க்கைக்கு முக்கியமானவை யாவை என்பதையெல்லாம் அறிவியல் ஆராய்தல் வேண்டும்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



அறிவும், இதயமும் இணைந்தாலே சமுதாயப் பண்பாடு மலரும். அப்போதுதான் மனிதரிடையே தியாக புத்தி வளரும். தற்போது சமுதாயத்தில் சான்றோர்கள் மட்டுமே சகோதரத்துவ அன்பும், அடுத்தவர்களிடம் நேசமும்கொள்கின்றனர். இந்த உணர்வு எல்லா மக்களிடமும் உள்ள இயல்பான உறவாகப் பரிணமிக்கச் செய்ய வேண்டும். ஏதோ சிலர் நல்லவர்களாக இருந்தால் மட்டும் போதாது. மனித சமுதாயத்தின் பெரும்பாலோர் நல்லவர்களாக இருக்க வேண்டும்.

"உயர்ந்த கொள்கைகளைப் பற்றி நினைப்பதும், பேசுவதும் சரிதான். ஆனால் அவற்றை வாழ்க்கையில் அனுஷ்டிக்க முடியுமா?" என்று பலர் கருதுவதை டால்ஸ்டாய் உணர்ந்து பதில் கூறினார். கொள்கை என்பது அழகாகப் பேசி மகிழும் விஷயமாக இவர்கள் நினைக்கிறார்கள். நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் எப்போதும் நம் கொள்கையிலிருந்தே நிகழ்கின்றது. ஒரு விஷயத்தைப்பற்றிய ஆழ்ந்த அபிப்பிராயம் அல்லது முடிவுதான் கொள்கை எனப்படும். அதை வாழ்க்கையில் கொண்டு செலுத்துதலே நடத்தையாகும். இவ்விதம் நடக்க வேண்டு என்றும் மனத்தில் எண்ணிக்கொண்டு அதற்கு நேர் மாறாக நடக்க முடியுமா?" என்று டால்ஸ்டாய் கேட்கின்றார்.

—*—

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



மனிதன் படைத்தவற்றுள் மிக உன்னதமானது கலை ஆகும். சித்திரம், சிற்பம், நாட்டியம் முதலிய கண் கொண்டு துய்க்கும் கலைகளும், இசை முதலிய காதால் துய்க்கும் கலைகளும், இலக்கியம் முதலிய உள்ளத்தாற் உள்ளத்தால் துய்க்கும் கலைகளும் நமக்கு அழகு உணர்ச்சியை ஊட்டி ஆனந்தம் அளிக்கின்றன. இந்தக் கலை, இலக்கியங்கள் வெறும் மகிழ்ச்சியூட்டுவதோடு சமுதாய நலனுக்கும், முன்னேற்றத்திற்கும் பயன்பட வேண்டும் என்று டால்ஸ்டாய் வற்புறுத்திக் கூறினர்.

உண்ணும் உணவு சுவையானதாக மட்டுமிருந்தால் போதாது. அது நம் உடல் நலனுக்கு ஏற்றதாகவும் அமைய வேண்டும். அதுவே நல்லுணவு. அதுபோலவே கலை இலக்கியங்களும் சுவைபயந்தால் மட்டும் போதாது. சமுதாய நலனுக்கு ஏற்றதாகவும் அமைய வேண்டும். கலையின் பெயரில் கீழ்த்தரமான உணர்வுகளைத் தூண்டி, ஒழுக்கக் கேட்டிற்கு வித்திடும் திரைப்படம், நடனம், பத்திரிகைகள், கலை, இலக்கியங்கள் எல்லாம் கண்டிக்க வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினர்.

அறுசுவையுடைய உணவு போல ஒன்பான் சுவை [நவரசங்கள்]யுடைய கலை, இலக்கியமும் ஆரோக்கியமாக அமைதல் வேண்டும்.

கலை கற்பனை சார்ந்தது. விஞ்ஞானம் மெய்யறிவைச் சார்ந்ததாகும். விஞ்ஞானத்தின் பெயரால் சமுதாயத்திற்குப் பயன்படாத வீண் ஆராய்ச்சிகள்,

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)



கொலைக் கருவிகளை அபிவிருத்திசெய்யும் தீய ஆராய்ச்சிகளையும் டால்ஸ்டாய் கண்டித்தார்.

கலையும், விஞ்ஞானமும், உணர்வும், அறிவும் இணைந்து சமுதாய நலனுக்குப் பயன்பட வேண்டும். சுரங்கம் தோண்டி தாதுப்பொருளை எடுக்கப்பயன்படும் வெடிமருந்தை, போருக்கு பீரங்கியின் வாயில் திணித்து மனித குலத்தை நாசமாக்குவதைக் கண்டித்தார், விஞ்ஞானம் மனித நேயமுடன் இருக்க வேண்டும். என்ற அவரது அறிவுரைகள் அணுகுண்டுகள் செய்து குவிக்கும் வல்லரசுகளின் காதில் விழுமா?

உழைப்புக்கு உரிய மரியாதை தர வேண்டும். கூடுமானவரை தன் தேவைகளைத் தானே நிறைவு செய்துகொள்ளவேண்டும். பிறர் உழைப்பைச் சுரண்டல் கூடாது. எளிய வாழ்வில் இன்பங்காண வேண்டும். அன்பும், ஒழுக்கமும் பேணி சமுதாய முன்னேற்றத்திற்கு அனைவரும் பாடுபட வேண்டும் என்பதே டால்ஸ்டாயின் உயர்ந்த சிந்தனைகளின் சாரமாகும்.

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

''உலகின் பசிப்பிணி போக்குவதே உயர்ந்த நல்லறமாகும்''

மணிமேகலை மன்றம்
இராஜபாளையம்

Digitization by American Academy of Indic Studies. AAIS(USA)

Digitization by American Academy of Indic Studies: AAIS(USA)

உலகப் பெரும் சிந்தனையாளர்களும், செந்நெறிகண்ட செம்மல்களும், அக இருள் போக்கும் ஒளிச் சுடர்களுமாகிய தத்துவ ஞானிகள் மகாவீரர் கன்ஃபூஷியஸ், டால்ஸ்டாய் ஆகிய மூவரின் நெறிகளின் வாழ்வில் விளக்க உரைகளின் தொகுப்பு "வான் கலந்த வாசகங்கள்"

பன்மொழிப் புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா ஆற்றிய இவ்விளக்க உரைகள் தெளிவும், சாரமான கருத்துக்களை எடுத்தியம்பும் சிந்தனைச் சுரங்கமாக மிளிர்கின்றன.

தமிழகத்தில் தனிச் சிறப்புடன் இயங்கும் மணிமேகலை மன்றம், "உலகின் பசிப்பிணி போக்குவதே உயர்ந்த நல்லறம்" எனும் குறிக்கோளுடன், உலகச் சிந்தனைகளை இணைவிக்கும் அரங்கமாகவும், செஞ்சொற்கவியின்பமும், தண்தமிழ் தண்ணமுதமும் வழங்கும் அரங்கமாகவும் விளங்கிவருகிறது. மணிமேகலை மன்றத்தின் ஞானவேள்வியின் ஓர் ஒளிச் சுடர் இந்நூல் ஆகும்.